இவன் வடிவமே, தேவன் என்பதை உணர்த்தியது; அதனால் யான் ஐயுற்றுச் சொன்னேன்" என்றான் சேணிகன். சுதன்மர் மீண்டும் அவனைப் பார்த்து, "மன்னவ, உலகில் இவனுக்கு ஒப்பானவன் இல்லை. இவனுக்கு அழகும் ஒளியும் தெய்வத்தன்மையால் அமைத்துள்ளன" என்றார். "அடிகளே, இந்தப் புண்ணிய புருஷனின் முற்பிறப்பையும், இவன் செய்த தவத்தையும், இப்பிறப்பில் இங்குத் துறந்த தன்மையையும் கூறவேண்டும்" என்றான் சேணிகன்.

சுதன்மர், தனது ஞானத்தால் சீவகன் சரிதத்தைச் சேணிக மன்னனுக்கு மொழிந்தார். பின்னர், சேணிகன் மகிழ்ந்து விடைபெற்றுச் சென்றான்.

கேவலோற்பத்தி

சீவகன் அவ்விடத்தைவிட்டு முந்திரிகைப் பழங்கள் நிறைந்த சோலையில் சென்று தங்கித் தவம் செய்தான். சீவகனுடைய மனைவியர் எண்மரும், நந்தட்டனும், தோழரும் சீவகன் தவம் செய்யும் இடத்தை அடைந்து, அவன் தவத்திற்கு இடையூறில்லாமல் உதவி செய்து தாமும் தவம் செய்திருந்தனர். சீவகன் உணவு முதலியவற்றை நீக்கி ஒரு வருஷம் உறுதியான தவத்தைச் செய்தான்.

மெய்ஞ்ஞானமே தேராகவும் உயிரைக் காத்தலே குதிரையாகவும், அறிவே யானையாகவும், சீலமே உடம்பின் கவசமாகவும் மெய்ப் பொருள்களே வாளும் கேடகமுமாகக் கொண்டு இருவினையாகிய பகைவரது மதிலைச் சீவகன் வளைத்தான். அப்போது கருமமாகிய பகைவருடைய சேனை, உறக்கம் என்னும் யானையையும், உணவென்னும் தேரையும், மறவி யென்னும் குதிரையையும். வியாதியாகிய காலாளையும் அணிவகுத்து அசுப்பரிணமம் என்னும் வாயிலை விட்டுச் சென்று பொருத்து. கருமமாகிய பகைவர் படையில் எழுவர் இறந்தனர். பதினறுவர் வலியின்றிச் சாய்ந்தனர். சன்மார்க்க மதி என்னும் யானை உதைத்தலால் எண்மர் இறந்தார். அப்போது, நப்புஞ்சகவேதமும் திரிவேதமும், அறுவகைத்துவர்ப்பும், கிருபையையுடைய சிந்தனையாகிய வாயிலில் வீழ்ந்து இறந்தன. மயக்கமாகிய மன்னனுடைய மக்களும் மந்திரியரும் இறந்தனர். அம் மன்னர் புருடவேதமாகிய வில்லில் தாகமோகம் என்ற அம்புகளைத் தொடுத்து எய்தான். சீவகன் அவ்வம்புகளை அசுபம் என்னும் ஈட்டியால் விலக்கி வெறுப்பாகிய வாளால் அவன் உயிரையும் அறுத்தான். பின்னர், ஐம்பொறியாகிய பகைவரையும், ஐயும், வளியும், பித்தும் என்ற மூவரையும் கொன்றான். குரோதன் முதலிய நால்வரை நிரோதனை என்ற அம்பால் கொன்றான். நித்திரை, பிரசலை என்பவரை விராகம் என்னும் வேலால் அழித்தான். பின்னர் உணர்வோடு, காட்சி, பேறு என்னும் வேறுமன்னர் பொருதனர். சீவகன், சுக்கிலத்தியானம் என்னும் அம்பால் அவரைக் கொன்றான்.

கர்மப்பகைவர் அழிந்தனர். வேறு பகைவர் இல்லாமையால், மூன்று உலகத்தையும் அலோகத்தையும் சீவகன் விழுங்கினான். அனந்த ஞானம் முதலிய நான்கு வகை வெற்றிக் கொடிகளை எடுத்து உயர்த்தி அருகனோடு ஒத்த தன்மையை அடைந்தான். அப்போது, தேவர், வித்தியாதரர் முதலியவர் வந்து சீவகனைக் கண்டு வணங்கி வாழ்த்தினர். இந்திரர் பொன்மாரி சொரிந்து வாழ்த்தினர். மண்ணவர் மலர் மழை பொழிந்து புகழ்ந்தனர். அக்காட்சியைச் சுதஞ்சனன் வந்து கண்டு களித்தான். இருபுறமும் கவரிகள் வீச விளங்கிய ஆதனம் சீவகனை அடைந்தது. மூவுலகும் காக்கின்ற முக்குடைகளும் வந்து கவித்தன. அப்போது தேவரும் வித்தியாதரரும் வந்து வணங்கி, "துறவு நெறிக்கடவுளே, எம் பிறவி அறுவதாக" என்று கூறித் துதித்தனர். பின்னர், தேவியர் எண்மரும் வந்து வணங்கி, "சுகதா, அறக்கடவுளே; உன்னால் அறிவு பெற்றோம்" என்று கூறிப் புகழ்ந்தனர். நல்வினையின் இயல்பையும் தீவினையின் இயல்பையும் சீவகன் கூறக் கேட்ட தேவியர் அவன் பாதங்களை வணங்கி வாழ்த்தினர்; "செல்வ, உன் சேவடிகள் மணிக்கு ஒளியைக் கொடுத்தன. எமது இருதய கமலங்களுக்கு வாசத்தைக் கொடுத்தன. தருமத்திற்கு இருப்பிடத்தை அளித்தன" என்று கூறித் துதித்தனர்.

பரிநிர்வாணம்

தேவியர் எண்மரும் சீவகனை, வணங்கி, "தேவ. அஞ்ஞான இருளை அகற்றும் ஞானச் சுடரை எமக்கு அருளிச் செய்ய வேண்டும்" என்று கூறினர். சீவகன் அவர்களுக்கு அருள் செய்ய எண்ணிக் கூறலானான். "இன்பமாகிய பசு, நான்கு கதியாகிய தொழுவில் தோன்றும். தோன்றிய பின், மூன எழுச்சியாகிய புல் கட்டை உண்டு, துன்பமாகிய பாலைச் சுரக்கும். அதனிடத்து ஆர்வத்தை அகற்றி அருகனது பாதங்களைச் சேர்ந்தால் சிவகதி பெறலாம். நீங்கள் உடலை வெறுப்பீராயின், அருகனை வணங்கி வாழ்த்துங்கள். ஒருவன், தன் உயிரைப் போல் பிற உயிரையும் காப்பானாயின், அவன் இன்னுயிர்க்கு இறைவனாய் இன்ப மூர்த்தியாய்ப், பொன்னுயிராய்ப் (தேவராய்) பிறந்து மோட்சம் பெறுவான். பிற உயிர்க்குத் துன்பம் செய்தால் நரகத்தில் அழுந்துவான். அவ்வாறு அழுந்தாமல் நீங்கள் தருமத்தைப் பெற்றீர்கள். நீங்கள் தருமம் பெற்ற தன்மை, கடலில் நழுவவிட்ட மணியைத் திரும்பப் பெற்றதைப் போன்றது. இனி உங்கள் உள்ளம் அவாக் கெட்டுத் தூய்மை பெற்றது. தருமத்தைக் கைக்கொண்டு தவம் செய்வீராக" என்று கூறினான்.

தேவியர் அம்மொழியைக் கேட்டு மகிழ்ந்து தொழுதனர். சீவகன், பிறவியை அகற்றிப் போதலை விரும்பி வைகாசிமாதத்துப்பிறைச் சந்திரன் போன்ற பல்லியங்காசனத்தைக்கொண்டு தியானத்தில் அமர்ந்தான். சேதநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்திரம் என்னும் நான்கையும் வென்றான். மோட்சத்தைப் பெறும் காலம் அவனுக்கு எய்தியது. அப்போது தேவர், வாத்தியங்கள் முழங்கக் கொடி தூக்கி, பொன்மாரிச் சொரிந்தனர், மலர்மாரிபொழிந்தனர். அகிற்புகை புகைத்தனர். பரிநிர்வாணம் என்னும் கலியாணத்தைச் சீவனுக்குச்செய்து வாழ்த்திச் சென்றனர்.

சீவகன் கேவலஞானப் பெண்ணைத் தழுவி இன்பம் நுகர்ந்தான். மாலை, சந்தனம், குங்குமம், அகிற்புகை, விளக்கு முதலியவற்றைத் தேவர் ஏந்தினர். பிணி மூப்பு, சாக்காடு, பிறப்பு, பிரிவு என்பவை இல்லாத கேவலமங்கையைச் சீவகன் மணந்து மகிழ்ந்திருந்தான். இணையில்லாத மோட்சமாகிய பேரின்பத்தைப் பெற்றான்.

சீவகன் பேரின்பம் பெற்றதை அறிந்த தேவியர், நின்றும், இருந்தும் பலவாறாகத் தவம் செய்து தம் பிறவியை நீத்தனர். பின்னர் அவர், சுவர்க்கத்துக்கு இந்திரராய்த் தோன்றித் தெய்வமகளிரோடு இன்பம் நுகர்ந்திருந்தனர்.

புதிய பஞ்சாப் பிரதமமந்திரி மேஜர் கிஷர் ஹயத்கான்.

நந்தட்டனும் தோழரும் நாள்தோறும் முயற்சியுடன் தவம் செய்தனர். பட்டினியுடன் சோடசபாவனைகளைப் பொருந்தினர். உணவு முதலியவற்றை ஒவ்வொன்றாக அகற்றினர். அருகனை எண்ணி அரிய தவம் செய்து முடித்துச் சுவர்க்கத்தில் தேவராய்த் தோன்றித் தெய்வ மகளிருடன் மகிழ்ந்திருந்தனர்.

(சீவகன் கதை முற்றுப்பெற்றது.)

இறும்



லைசென்ஸ் தேவையில்லை

ஆடோமாடிக் ரிபீடர்

திருடர்களையும், விலங்குகளையும் பயமுறுத்த ஆடோமாடிக் ரிபீடர் எவ்விதத் தொந்தரவுமின்றி 6 முறை சுடலாம். உண்மை ரிவால்வரைப்போல் சப்தம் கேட்கும். சுடும்பொழுது நெருப்பு தெரியும். தீங்கான விலங்குகள் பறவைகளை விரட்ட உபயோகமானது. அவசரத்திற்கு ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டும். லைசென்ஸ் தேவையில்லை. நெ. 7777 விலை ரூ. 4/4/-35 ரவைகள் இலவசம். நெ. 8888 ரூ. 5/8/- 45 ரவை இலவசம். நெ. 9999 ரூ. 6/12/- 55 ரவை இலவசம். அதிகப்படி 400 ரவை ரூ. 3/- பெல்டுடன் கேஸ் ரூ. 1/12/- ஆயில் ரூ. -/12/- தபால் சார்ஜ் பிரத்யேகம்.

இலவசம்:— ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒரு அழகிய மியூட் கைக் கடியாரம். ஒவ்வொரு துப்பாக்கியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். சேர்ந்தாற்போல் இரண்டு வாங்கினால், 3 அழகிய மியூட் கடியாரங்கள், 3 தோலா லண்டன் நியூ கோல்ட், தபால் சார்ஜ்.

இந்த குறைந்த கட்டணங்கள் வாபீஸ் பெறுமுன் எழுதுங்கள்.

LONDON C. COMPANY,

Post Box No. 165 (S.M.M.) LAHORE (India)

(EAB)

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 30 23-8-'42

Price 2 Annas

மண்டைப் புழு!

(நியாயவாதி).

அன்று வந்த தினசரிப் பத்திரிகையில் பிரசுரமான ஒரு கொலையின் விவரங்களை நான் படித்துக்கொண்டிருந்தேன். கணவன்—மனைவி—கள்ளக்காதலன்-எனும் இம்மூவராடிய கொடிய உண்மை நாடகம் அது. பத்திரிகை வாயிலாக வெளியான அதை நான் படித்ததைக் கவனமாய்ச் செவியுற்றார் தம்பியண்ணு. அதன் பின்னர் அவர் தனக்குத் தெரிந்த ஒரு பழங்கதையை ஆரம்பித்துவிட்டார். அவர் கூறியகதைதான் இது!

"இது இருபது வருடங்களுக்கு முன்னுல் நடைபெற்ற உண்மைக் கதை. அப்பொழுது எனக்கு கோயம்புத்தூர் விவசாயப் பண்ணையில் உத்தியோகம். அதே பண்ணையில் மாணிக்கம், மார்க்கன் என்ற இரு இளைஞர்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அவ்விருவரும் ஏறக்குறைய ஒரே பிராயத்தினர். அவர்களுக்கு தாய் தந்தையர், உற்றார் உறவினர் யாருமில்லை. குழந்தைப் பிராயத்திலிருந்தே ஒருங்காய் வளர்ந்த அவர்கள் இணைபிரியாத இரட்டையரைப் போல் தோன்றினர். அவர்களது அன்னியோன்னியமும் பரஸ்பர அன்பும் நாளாக ஆக விருத்தியடைந்தன.

விவாகமாகாத அவ்விரு இளைஞர்களும் ஒரே விடுதியில் வசித்தனர். அவர்களுக்கு சாப்பாடும் படுக்கையும் ஒரே இடத்தில்தான். அவர்கள் வேலை செய்யும் இடமும் ஒன்றே. அவர்கள் பிரிந்திருப்பது என்பது அவர்களது தன்மைக்கு மாறுபட்டதாகையால் அவர்களை தனித்துக் காண்பது அரிது.

மாணிக்கத்துக்கு விவாகம் நடைபெற்ற பின்னர்தான் நண்பர்களது வாழ்க்கையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. மாணிக்கத்தின் வீட்டுக்கு ஒரு எஜமானி முளைத்த பின் அதில் வசிப்பது முறையன்று என்று மார்க்கன் கருதினுன். தனது வாஸத்துக்கென வேருெரு தனி விடுதி அமர்த்திக்கொண்டு அதில் வசிக்கலானுன்.

ஆனுல் அவர்களது நட்புக்கு அதனுல் யாதொரு பங்கமும் இல்லை. மனைவியின் வரவால் மாணிக்கம் தனது நண்பனுடன் உறவாடுவதை குறைத்துக் கொள்ளவில்லை. மார்க்கனும் தான் வசித்து வந்த பழைய வீட்டுக்கு அடிக்கடி செல்லுவான். பெரும்பாலும் அவன் புதிய தம்பதிகளது அதிதியாகவே இருப்பான். மாணிக்கத்தின் மனைவி மரகதவல்லியின் சமையல் திறத்தை அவன் புகழாத நாள் இராது.

மரகதத்துடன் மார்க்கன் நெருங்கிப் பழகலானுன். ஆனுல் அது விபரீதமான நிலைமைக்கு அவர்களைக் கொண்டு வந்துவிட்டது. தனது கணவனிடம் காணுத குண விசேஷங்களையும் லக்ஷணங்களையும் மரகதம் அவனது நண்பனிடத்தில் கண்டாள். அவளது அன்பான பேச்சும் அழகான முகமும் மார்க்கனது அறிவை மயக்கி விட்டன. அதிகம் கூறுவானேன்: அவர்களது பிரேமை காதலில் முற்றியது. அந்தோ விபரீதம்!

மனைவி தன் கடமையை மறந்து விட்டாள். நண்பன் தனது வாய்மையைப் புறக்கணித்தான். இருவரும் தாங்கள் இறங்கின பாதகத்தின் கொடுமையையும் துரோகத்தின் இழிவையும் சற்றும் கவனிக்கவில்லை.

நாட்கள் பல சென்றன. காதலரது தீயவொழுக்கத்தை தடை செய்வது எதுவும் இல்லை. கணவன் மனைவி மீதும் நண்பன் மீதும் அபாரமான நம்பிக்கை வைத்திருந்தான். அவர்கள் நெருங்கிப் பழகுவது அவனுக்கு இன்பத்தையளித்ததேயன்றி வேறில்லை. மரகதம் நடத்தை தவறியவள் என்பதையும் மார்க்கன் நம்பிக்கைத் துரோகி என்பதையும் அவன் கணவனும் சந்தேகித்திருக்கமாட்டான்.

ஆனுல் பொய்யும் புனைசுருட்டும் என்றும் நிலைபெறக்கூடிய தன்மையனவன்று. "பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்" என்னும் பழமொழியின் உண்மை இக் கள்ளக்காதலரது விஷயத்திலும் நிதர்சனமாகியது.

ஒரு சமயம் மார்க்கனுக்கு கடுமையான மலை ஜுரம் வந்தது. அந்நிலையில் அவனை தனியே விடுவது பிசகு என்று எண்ணிய மாணிக்கம் அவனை தன் வீட்டுக்கு அழைத்து வந்து அவனுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்யலானுன். பத்தியம், மருந்து முதலியவற்றைக் கவனிக்கும்படி அவன் தனது மனைவியிடம் கூறினுன். அவளுக்கு அதை சொல்லவும் வேண்டுமா?

ஜுரம் கடுமையாய் இருந்ததால் மார்க்கன் படுக்கையிலேயே இருக்கவேண்டியதாயிற்று. அவனது வேலையை மாணிக்கம் செய்ய சம்மதித்தபடியால் அவனுக்கு ரஜா கிடைப்பது எளிதாயிருந்தது. வேலை மிகுதியால் மாணிக்கம் நேரங் கழித்துத்தான் வீட்டுக்குத் திரும்புவான் அதனுல் காதலருக்கு ஏற்பட்ட குதூகலத்தை விவரிக்கவும் வேண்டுமோ?

ஒரு நாள் மாணிக்கம் வழக்கத்துக்கு மாருக வீட்டுக்குச் சீக்கிரம் திரும்பினுன். அச்சமயம் அவன் நோயாளியின் அறையில் கண்ட காட்சியால் அவன் அடைந்த நிலைமையை எப்படி எடுத்துக் கூறுவது?

அவன் கண்ட காட்சி இதுதான்.

அவனது அன்பின் கனியான மனைவியும் அவனது உயிருக்குயிரான நண்பனும் தங்களை மறந்து சிருங்காரத்தில் ஈடுபட்டு நின்ற காட்சி அறைக்கு வெளியே நின்ற வண்ணம் ஜன்னல் வழியே நோக்கிய கணவனை— அவர்கள் கவனிக்கவில்லை.

சற்றும் எதிர்பாராத அவ்விபரீத காட்சியால் உணர்விழந்து செயலழிந்து நின்ற மாணிக்கத்துக்கு தனது நிதானத்தையும சுயபுத்தியையும் மீட்பதற்குசில நிமிடங்கள் பிடித்தன. அவன் முகத்தில் கொரூரமான உறுதி காணப்பட்டது. "துரோகிகாள்! என் வஞ்சத்தின் கொடுமையை நீங்கள் சீக்கிரம் உணர்வீர்கள்" என்று கூறிக்கொண்டே அவன் அவ்விடத்தை விட்டு அகன்ருன். அவன் வீரத்தையும் சென்றதையும் யாரும் கவனிக்க வில்லை.

மாணிக்கம வேலை செய்தது விவசாயப் பண்ணையில். பயிர்கள் சம்பந்தமான பூச்சிகளையும் புழுக்களையும் கவனிக்கும் இலாகாவில் தான். ஆதலால் அவனுக்கு பல ரகபபட்ட கொடிய பூச்சிகளையும் புழுக்களையும் பற்றிய விஷயங்கள் நன்கு தெரியும்.

அன்றிரவு அவன் வீட்டுக்குத் திரும்பிய பொழுது அவனது சட்டைப் பையிலுள்ள கண்ணுடி சீசாவில் ஒரு புழு பத்திரப்படுத்தப்பட்டிருந்தது. அது பயிர்களை அழிப்பதுடன், கால்நடை அல்லது மனிதரது செவியில் புகுந்து விட்டால், அவரது பாடு மகா சங்கடமாகிவிடும். மண்டையிலுள்ள பிரதேசத்தில் சஞ்சரித்துக்கொண்டு அது அவர்களுக்கு தீராத நரக வேதனையை விளைவிக்கும். அவ் வேதனையிலிருந்து மீட்சி பெற வழி ஒன்று தான் உண்டு. அது மரணமே.

கொடுமையில் நிகரற்ற மண்டைப் புழுவுடன் வந்த மாணிக்கத்தின் நடத்தையில் யாதொரு மாறுதலையும் கள்ளக் காதலர்கள் கவனிக்கவில்லை. மனைவியுடன் குலாவிய பின் அவன் நோயாளியான நண்பனைப் பார்க்கச் சென்ருன் அவனது நிலைமையைப்பற்றி பரிவுடன் விசாரித்தான். அவனுக்கு கொடுக்க வேண்டிய மருந்தை



மேலும், கவர்ச்சியுடைய இந்த நடிகை சொல்லுவது: "எப்பொழுதும் நான் லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகிக்கிறேன். என்னுடைய சரும அழகை காப்பாற்ற இதுதான் நான் செய்வது. ஆகையால் சரும அழகை கவனிக்கும் ஒவ்வொருவருக்கும் லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள் என்றே நான் சொல்லுவேன்.

அழகிய அஸுரி கெட்டிக்காரிதான். லக்ஸ் டாய்லெட் சோப்பின் நுரைகள் சருமத்தை எப்படி மாசு, மருவுகளினின்று காக்கிறதென்று சொந்த அநுபவத்திலிருந்து அவர் தெரிந்துகொண்டிருக்கிருர். நீங்களும் இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் பிரியப்படுகிருர்.

லக்ஸ் டாய்லெட் சோப்

LTS. 76-172 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

கொடுத்தான ஆனுல அம் மருந்தில் மயக்கத்தை அளிக்கும் பதார்த்தம் கலக்கப்பட்டிருந்ததை நோயாளி எப்படி அறியம்.

மருந்தை உட்கொண்ட சில விநாடிக்குள் மார்க்கன் தன் உணர்வை இழந்து விட்டான். சவம் போல் கிடந்த அவனை நோக்கி புன்னகை புரிந்தான் மாணிக்கம். மெதுவாய் தனது சட்டைப் பையில் இருந்த சீசாவை எடுத்தான். அதில் தயாராய் இருந்த மண்டைப் புழுவை எடுத்து மார்க்கனது வலது காதுக்குள் விடுத்தான். "உள்ளே போ! புழுவே! உனக்கேற்ற உணவைத் தேடு" என்ருன். புழுவும் அப்புழை வழியே உள்ளே மறைந்தது."

இப்படி தம்பியண்ணு கூறிய பொழுது நான் என் செவிகளைப் பொத்திக் கொண்டு, "போதும்! போதும்! தம்பியண்ணு! இந்த அருவருப்பான கதையை நான் மேலே கேட்க விரும்பவில்லை," என்றேன்.

ஆனுல் தம்பியண்ணு நிறுத்தினுல் தானே! கதையை மேலே தொடர்ந்து கூறலானுர்.

"மாணிக்கத்தின் செய்கையை அவன் மனைவி தூரத்திலிருந்து கவனித்து விட்டாள். கணவன் காதலினின் செவியில் எதையோ திணித்ததைப் பார்த்தவுடன் அவள் பரப்பரப்புடன் அங்கே வந்தாள். "என்ன செய்கிறீர்கள்?" என்று வினவினுள்.

"சீ! அப்பால் போ! உன்னைக் கெடுத்த பாவியைச் சும்மா விடுவேன் என்று நினைத்தாயா? அவன் காதுக்குள் மண்டைப்புழுவை விட்டிருக்கிறேன். அவன் அனுபவிக்கப்போகும் வேதனையை நீ சீக்கிரம் காண்பாய். அதுவே உனக்கும் தண்டனையாகும்" என்ருன்.

"ஐயோ!" என்று அலறிக்கொண்டே அப்பால் சென்ருள் மரகதம். அதே சமயம் படுக்கையில் கிடந்தவன் சப்தம் ஒலித்தது. மண்டைப்புழு தன்வேலையைச் செய்ய ஆரம்பித்துவிட்டது.

அப்பப்பா! நோயாளிபட்ட வேதனையை எழுதி வர்ணிக்க முடியாது. நரக வேதனை என்பது வாஸ்தவத்தில் உண்டோ இல்லையோ! இம்மையில் அதை அவன் பூராவும் அனுபவித்தான். அவனது வேதனைக்கு ஒரு ஓய்வில்லை. அவனது அவஸ்தைக்கு யாதொரு சாந்தியும் இல்லை.

மார்க்கனுக்குதான் அனுபவித்த கொடிய வேதனையின் காரணம் தெரியாது. மாணிக்கத்தின் வஞ்சத்தின் விளைவு அது என்பதை அவனுல் அறிய இயலவில்லை. மாணிக்கம் அவனிடம் அன்புள்ளவன்போல் நடித்து வந்தான். மரகதம் வாயைத் திறக்கவில்லை. காதலனிடம் உண்மையைக் கூறுவதற்கு அவளுக்கு துணிவில்லை.

நாட்கள் பல சென்றன. தீராதவேதனையுடன் கிடந்த மார்க்கன் மரணத்தை விரும்பினுன். ஆனுல் அது வந்தால் தானே! சொல்லாமல் கொல்லும் அவஸ்தையை விளைவித்த புழு அவனது மண்டைக்குள் யாதொரு இடையூறுமின்றி சஞ்சரித்துக்கொண்டிருந்தது அந்த நிலைமையில் காதலருக்கு இன்பமேது? சல்லாபத்துக்குத் தான் அவகாசம் ஏது?

ஒரு நாள் காலை மார்க்கன் கட்டிலில் புரண்டுகொண்டு வலி மிகுதியால் அலறிக்கொண்டிருந்தான், அவன் பக்கத்தில் சற்று தூரத்தில் உட்கார்ந்திருந்த மாணிக்கம் அவனது அவஸ்தையை களிப்புடன் நோக்கிக் கொண்டிருந்தான். உள்ளே இருந்த மரகதம் காலை உணவை தயாரித்துக்கொண்டிருந்தாள்.

வேதனையின் கொடுமையை தாங்கமாட்டாமல் மார்க்கன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்துகொண்டு பிசாசுபிடித்தவனைப்போல் தலையை இப்படியும் அப்படியும் ஆட்டினுன். அப்படி அவன் செய்துகொண்டிருக்கையில் அவனது இடது செவியிலிருந்து புழு தரையில் விழுந்தது.

அவனது இடது செவிக்குள் சமீபத்தில் அது சஞ்சரித்துக் கொண்டிருந்தது போலும் அவன் ஆட்டின வேகத்தில் அது மீண்டும் வெளிப்பட்டது. அவனது அவஸ்தை எதிர்பாராத விதமாய் இப்படி நீங்கியது, கீழே புழு விழுந்ததைக் கண்டு அவன் திடுக்குற்ருன். அதே சமயத்தில் அவன் கவனம் மாணிக்கத்தின் மீது சென்றது, மாணிக்கத்தின் முகத்தில் காணப்பட்ட மாறுதல் அவனது சந்தேகத்தை எழுப்பியது, உடனே அவன், "இந்தப் புழு என் காதில் எப்படி புகுந்தது?" என்று சொல்லிக்கொண்டே தரையில் நெளிந்த அதை நசுக்கிக் கொன்றுவிட்டான்.

மாணிக்கம் எழுந்தான் "அடே, படுபாவி. நான் தான் இப்புழுவை உன் காதில் செலுத்தினேன், நீ பட்ட வேதனை போதாது! என்னமோ உன் அதிர்ஷ்ட வசத்தால் புழு வெளியே வந்து விட்டது என்ருன்.

அதைச் செவியுற்ற மார்க்கன் மூர்க்கா வேசம் கொண்டான். தான் அது வரையில் அனுபவித்த கொடிய வேதனைக்குக் காரணம் மாணிக்கமென்பதை உணர்ந்த பின் அவனுக்கு வந்த ஆத்திரத்திற்கு ஒரு எல்லையில்லை: கட்டிலுக்கு சமீபத்திலிருந்து பழம் நறுக்கும் கத்தியை எடுத்து அவன் மாணிக்கத்தின் மார்பின் மீது வீசினுன் அதே ஸமயம் உள்ளேயிருந்த மரகதம் அவர்களிடம் ஓடி வந்தாள். ஆனுல் அவளால் கத்தி வீச்சைத் தடுக்க முடியவில்லை. மாணிக்கத்தின் மார்பில் ஏற்பட்ட காயம் அவனுக்கு மரணத்தை அளிக்கும் காயமாய் இருந்தது.

மரணவஸ்தையுடன் கீழே கிடந்த மாணிக்கம் மார்க்கனை வெறியுடன் நோக்கினுன். அடே கொலைபாதகா! புழு வெளி வந்து விட்டதால் உனது வேதனை நீங்கியது என்று நினைக்காதே, அது பெண் புழு, உன் மண்டைக்குள் அது எத்தனையோ முட்டைகளை இட்டிருக்கும். அம் முட்டைகள் புழுக்களானுல் உன் அவஸ்தை நரகாவஸ்தை தான்" என்ருன்

ஐயோ! என்று கத்திக்கொண்டே மார்கன் தரையில் விழுந்தான். போலீஸாரும் வைத்தியரும் வந்தபொழுது அவன் கடுமையான மூர்ச்சையில் ஆழ்ந்திருந்தான்

கதை முடிந்து விட்டது. மார்கன் வெகு நாட்கள் ஜீவித்திருக்கவில்லை. மாணிக்கத்தின் பிரேத விசாரணை முடிவதற்குள் அவன் இறந்து விட்டான். மரகதத்துக்கு பைத்தியம் பிடித்து விட்டது, பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அவள் இரண்டு வருடங்கள் கழித்து விட்டு இறந்தாள்.

இப்படி தம்பியண்ணு கதையை முடித்த பிறகு தான் "இம் மாதிரி கோரமான கதைகளை இனியேனும் நீர் சொல்லாமலிருந்தால் நலமாயிருக்கும்! என்றேன். அவர் புன்னகையுடன் இந்தக் கதைக்கு என்ன குறை? என்ருர்:

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்ன ஸ்கலிதம், பலஹீனம், தாதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனுபஜார் ரோடு, மதராஸ்.

கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ் 272, சுக்ரவார் பேட்டை



மழை ஜலம் போவதற்
கானு குழாய்களும் அதன்
பிட்டிங்குகளும்

எல்லா நிலைகளுக்கும் அழுத்தம், நீடித்த உழைப்பு, நம்பிக்கையான உழைப்பிற்கு வார்ப்புட இரும்பு குழாய்களுக்கு இணையொன்றும் கிடையாது.

இந்தியாவிலேயே நவீன இயந்திர தளவாடங்களை அமைத்துள்ள ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங்ஸ் கம்பெனி லிமிடெட், பல வருஷங்களாக வார்பட இரும்பு தண்ணீர் குழாய்கள், இதர வகை குழாய்கள், பிட்டிங்குகள் முதலியவற்றைப் பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷனுக்குத் தயாரிக்கின்றனர்.

காட்லாகும் விலை விபரங்களும் கேட்போருக்கு அனுப்பப்படும்.

தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ கல்கத்தா.
சென்னை ராஜதானி ஏஜண்டுகள் :
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.
ELC-3

சங்கீதப் பகுதி

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் க்ருதிகள்

ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் க்ருதிகள், அனைத்துமே அழகு பொருந்தியவை. அவற்றில் சிலவற்றை ஸங்கீத ரத்னகர, 'ஸங்கீத கலாநிதி' அரியக்குடி ஸ்ரீ டி. ராமானுஜ அய்யங்கார் "மித்திரன்" வாரப்பதிப்புக்காக ஸ்வரப் படுத்திக் கொடுத்திருக்கிறார். "ஓ ஜெகதம்பா" என்றக் க்ருதியை அவர் ஸ்வரப்படுத்தியபடி கீழே பிரசுரிக்கிறோம்.

I

பல்லவி

ஓ ஜகதம்ப நனு
நீவு ஜவமுனப்ரோவு || ஓ ||

அனுபல்லவி

ஈ ஜகதிகதியை ஜனுலகு மரி
தேஜமுன ராஜவினுதயௌ
ராஜமுகி ஸரோஜ நயன! ஸுகுண
ராஜிராஜித காமாக்ஷி! || ஓ ||

சரணம்

1. கன்னதல்லி! நாது செந்த நிந்த
கன்னடஸலு பகதகுனு?
நின்னுநே நம்மியுன்னவாடுகாதா
நன்னெ கனி ப்ரோத்ஸுட கருதா?
அன்னி புவனம்பு லுகாசேவுப்ர-
ஸன்னமூர்த்தி! அன்ன பூர்ண! வரதா!
வின்னபம்பு, வின்னவிஞ்சி, ஸந்நிதி
விபன்ன பயவிமோசன தௌரேய || ஓ ||
2. ஜாலமேல? சைலபால!
தாளஜாலனு ஜனனி! நின்னுவினு
பாலனுர்தமுக வேரேதைவமுல
லோலமதியை நம்மிதினு?
சீலனுத சீலமு நே நெச்சடனென
கான கான லோலஹ்ருதயா!
நீலகண்டு ராணி நின்னு நம்மிதி
நிஜம்புக பலிகேகிதி தயஜேஸி || ஓ ||
3. சஞ்சலாத்முடேனு ஏமிபூர்வ
சஞ்சிதமுலு ஸலிபிதினோ
கஞ்சி காமாக்ஷி நேடுநின்னுபொட
காஞ்சிதினி சரணு சரணு நீ
விந்துக த்ருஹஞ் சலகதி நாதெச
நுஞ்ச வம்ம சயாம க்ருஷ்ண வினுதா
மஞ்சி கீர்த்தி மிஞ்சி நட்டிதேவி
மதிஞ்சி மத பாரதமுலு ஸஹிஞ்சி || ||

II

ஓ ஜகதம்ப! நனு நீவு ஜவமுன ப்ரோவு—இந்த ஜகத்திற்கு தாயைப் போன்றவளே! என்னை நீ சீக்கிரமாகக் காப்பாற்று.]

ஈ. ஜகதி கதியை—இந்த ஜகத்திற்குக் கதியாகி

ராஜமுகி! ஸரோஜ நயன! ஸுகுணராஜிராஜித்காமாக்ஷி—சந்திரனைப் போன்ற முகத்தை யுடையவளே! செந்தாமரை இதழ்களைப் போன்ற கண்களையுடையவளே! உத்தம குணங்களால் விளங்கும் காமாக்ஷி!

ராஜ வினுதயென ஜனுலகு மரிதே ஜமுன—அரசர்களால் ஸ்தோத்திரம் பண்ணப்படுபவளாயிருந்து, மேலும், ஜனங்களுக்கு தேஜஸை (அளித்து)

கன்ன தல்லி நாது செந்த இந்த கன்னடஸலுபக தகுனு—என்னைப் பெற்ற தாயே! என்னிடத்தில் இவ்வளவு அலக்ஷியம் செய்யத் தகுமா?

நின்னு நே நம்மியுன்னவாடு காதா—உன்னை நான் நம்பினவன் அல்லவா?

நன்னு ஒகனி ப்ரோத்ஸுடகு அருதா—என்னை (ஒருவனை) காப்பாற்றுவது உனக்கு அரிதா?

அன்னி புவனம்பு லுகா சேவு—எல்லா உலகங்களையும் காப்பாற்றுகிறாய்!

ப்ரஸன்ன மூர்த்தி! அன்னபூர்ண! வரதா!—பார்ப்பவர்களுக்கு ப்ரியத்தையும் அனுகூலத்தையும் கொடுக்கும் ரூபத்தை யுடையவளே! அன்னபூர்ணா! என்னும் திருநாமத்தையுடையவளே! அடியார்கள் வேண்டும் வரத்தைக் கொடுப்பவளே!

வின்ன பம்பு, வின்ன விஞ்சி—கோரிக்கைகளை தெரிவித்துக் கொண்டு,

ஸந்நிதி விப்பன்ன பய விமோசன தௌ ரேய—உன் ஸன்னதியில் வந்து அடைந்தவர்களின் பயத்தைத் தீர்ப்பதில் முதன்மை வாய்ந்தவளே.

சைல பால ஜன்னி—ஹிமவானின் புத்ரியே! தாயே!

ஜாலமுரல, தாளஜாலனு—ஏன் இந்த ஜாலம்? என்னால் தாங்க முடியாது.

லோல மதியை பாலனுர்த்தமுக—சபல சித்தத்துடன் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று

நின்னுவினு வேரெ தைவமுல நம்மி தினு?—உன்னைத் தவிர வேறே தெய்வத்தை நம்பினேனு?

சீலமு நேனு எத்ஸுடனு ஜனகான—உன் நடத்தையைப் போன்றதை நான் எவ்விடத்திலும் பார்த்ததில்லை!

சீலனுத—ஒழுக்கமுள்ளவர்களால் போற்றப்பட்டவளே!

கான லோல ஹ்ருதயா—ஸங்கீதத்தில் நாடின மனதையுடையவளே!

நீலகண்டு ராணி—நீலகண்டனின் பார்யையே,

நிஜம்புக நின்னு நம்மிதி பலிகே—நிஜமாக உன்னை நம்பினேன் என்று சொன்னேன்.

தய ஜேஸி—தயவு செய்து

சஞ்சலாத் முடனு ஏமி பூர்வ ஸஞ்சித முலு ஸலிபி தினோ?—சபல சித்தமுடைய நான் பூர்வ ஜன்மத்தில் என்ன புண்யம் செய்தேனோ?

கஞ்சி காமாக்ஷி நேடு நின்னு—காஞ்சியில் வீற்றிருக்கும் காமாக்ஷி!

பொடகாஞ்சி தினி சரணு சரணு-இன்று நான் உன்னை தரிசனம் செய்தேன். சரணம், சரணம்.

நீவு இந்து கத்ரு கஞ்சல கதி நாதெ சனு உன்ஸவம்ம—நீ இப்பொழுது உன் கடைக்கண் பார்வையை என்னிடத்தில் வை!

ச்யாம க்ருஷ்ண வினுதா, மஞ்சி கீர்த்தி மிஞ்சி நட்டி தேவி!—ச்யாம க்ருஷ்ணனால் துதிக்கப்பட்டவளே! உத்தமமான கீர்த்தி விளங்கும் தேவி!

மதிஞ்சி மதபாரத முலு ஸஹிஞ்சி—என்னை மதித்து என் அபராதங்களைப் பொறுத்து

வர ஸித கிரி நிலயுனி ப்ரிய ப்ரண யினி! பரா சக்தி!—சிரேஷ்டமான வெள்ளியங்கிரியில் வீற்றிருக்கும், பரம சிவனுக்கு ப்ரியமான பார்யையே! பரா சக்தி!

மன வினி வினுமா—என் ப்ரார்த்தனையைக் கேள்

மரியாதி லெருகனி—மரியாதை அறியாத

துஷ் ப்ரபுல—துஷ்ட ப்ரபுக்களை

கோரி விநுதிம்பக—வேண்டி ஸ்தோத்திரம் செய்யாமல்

வரம் பொஸகி—வார்த்தை கொடுத்து

III

* இந்த அடையாளம் அந்தரகாந்தாரம்.

ராகம்—ஆனந்த பைரவி   தாளம்—ஆதி

(22-வது மேள கர்த்தா (கரஹரப்ரியா)வில் ஜன்யம்)

ஆ: ஸகரிகம பதபஸ் — அ: ஸ்நிதப மகரிஸ

பல்லவி

1. பா ; ; பமபநி ப்ா, நிஸா மாபம கரிகம | பாகம பாதப மா, த |
ஓ . . . . ஜக | தம் . . . . . பா . |
பம மாபம கரி காமா ||
. . ந . . . . . ன் னு ||

2. பா ; ; பமபநி பா, ஸ்நீதா ப மாபம கரிகம | பாகம பாதப மா, த |
ஓ . . . . ஜக | தம் . . . . . பா . |
பம மாபம கரி காமா ||
. . ந . , . . . ன் னு ||

3. பா, நிபா ஸ்ா ; , நி ரிஸ்நித பா, நிபா மாபம கரிகம |
ஓ . . . . ஜக |
பாகம பாதப மா, த | பம மாபம கரி காமா ||
தம் . . . . . பா . | . . ந . . . . ன் னு ||

4. பா, நி பா ஸ்ா, நிஸ் ரீக்ரி நிஸ்ரிஸ் நிதபா மாபம கரி கம |
ஓ . . . . ஜக |
பாகம பாதப மாதப | பம மாபம கரி காமா ||
தம் . . . . . பா . . | . . நன் . . . . . னு ||
பமகரி ரிமகரி ஸா ; ; ; ; ஸஸ | கா, ரி ஸா, நி
நீ . . . . வு . . . . . ஜ . | வ . . . மு
ஸாரிஸ நி | , ஸாபமகரி ரிகாமா || (ஓ)
ன . . . | ப்ரோ . . . . . . வு ||

அனுபல்லவி

1. ஸா, கரிநிஸஸபா மகபம கரிகம | பா, தபம கத | பம ககமா; ||
ஈ ஜகதிகதியை ஜ . னு . லகுமரி | தே ஜமுன ரா . | ஜவி னுதயௌ ||

2. ஸா, கரிநிஸஸபா மகபம தபகாரிகம்ா | பா, பநிநிபபம கத |
ஈ ஜகதிகதியை ஜ . னு . ல . கு . ம ரி | தே ஜ . மு . ன . ரா . |
பமககா மக மா ||
ஜவினுத யௌ . . ||
பா, தப் மதபம கரி ஸஸ்ாஸ் நிநிநி ஸ்ாக்ரிீ | ஸ்ா ; ; நிப |
ரா . . . . ஜ . முகி ஸரோஜ நயன ஸுகு . ண | ரா . . ஜிரா |
, பாமக பமகரி காம || (ஓ)
ஜித . கா . . . மாக்ஷி ||

சிட்டைஸ்வரம்

பமகரி ஸ்நி ஸமகரி ஸநி ஸகரிநி | ஸகா கா்ம பத | பமகம பா; ||
தபமா கரிகம பமாகரிஸ ஸ்ா | , நிதப பா, ம | கரிஸா, மகம || (ஓ)

சரணம்

ஸா ஸ பாப பா, நிபா மபும மா, ப கரி | ஸா, ப மா, ப மா, ப கரி |
கன்ன தல்லி நா . து செந் . த நிந் . . த | கன் . . . . . . ன ட |
கம தபபம கரி ஸா ||
தலு ப . க . . தகு னு ||
ஸா ஸரிகா, ரி ஸ்ா ஸ ஸாரிக ரிநி ஸகரிகம | பா பநி பாமகத் |
நின் னு . நே . நம் மி யுன் . . . ன . வா . டுகாதா | நன் னெ . கன்னி ப்ரோ |
பம மகபம கா; ||
ஸு ட . க . ரு . தா ||
பா, தப மீதபம கரி ஸாஸ்நி ஸாஸகரிரி | காம பா, ப பா, நி |
அன் . . . . . னி . புவ . னம்பு லு காசே . வுப்ர | ஸன்ன மூர்த்தி அன் . |
ப மா, தபபம கா மரி கம ||
ன பூர் . . ண . வ ர . தா . ||
பா, நிபா ஸ்ா ி ஸ்ா, ப்ம் க்ரிஸாஸ் ஸ்ாஸ் ஸ்தநீ ஸ்ஸ |
வின் . ன பம் பு வின் . . ன . விஞ் சி ஸன் . . நி தி |
ப ஸ்ா ஸ்ஸ்ஸ பநிப | . ப மகபமகரி காம ||
வி பன் ன பய வி . மோ | . ச ன . தௌ . . . ரேய ||

ஸாஹித்யம் மட்டும் பாடவும்

பம கரி ஸநி ஸம்கரி ஸநி ஸகரிநி | ஸ கா காமபத | மமகம பா; ||
வர ச்ரித கிரி நிலயுனி ப்ரியப்ரணயுனி | ப ரா சக்திமன | வினி வினுமா ||
தப மா கரி கம பமாசரிஸ ஸ்ா | , நித பபா, ம | கரி ஸா, மகம
மரி யாதலெருக னிதுஷ்ப்ரபுலு கோ | . ரி வி னு திம் ப | கவரம் பொஸகி || (ஓ)

துருக்கியின் நல்ல காலம்

★

கே. ஸ்ரீநிவாஸன்

★

ஹிட்லருக்கு கவலையினால் தலை நரைத்து விட்டதாக செய்திகள் கூறுகின்றன. ஏன் நரைக்காது? மேற்கேயும் தெற்கேயும் பிரிட்டனும் அமெரிக்காவும் சேர்ந்து பாயும் போலிருக்கிறது ஒரு பக்கத்தில்; ரஷ்யா கிழக்கேயிருந்து துரத்திக் கொண்டு வரும்போலிருக்கிறது மற்றொரு பக்கத்தில். சனியனை விலைக்கு வாங்குவது போல் அவர் பிடித்துக் கொண்டுள்ள நாடுகளிலும் எழுச்சி மேல் எழுச்சி. உலகத்தையே அடக்கியாள வேண்டுமென நினைத்தது பகற்கனவாகி விட்டது. இருந்தாலும் ஹிட்லரின் பொல்லாத காலத்திலும் அவருக்கு அசட்டு தைரியம் மிகவும் அதிகம். அதனால் இப்போதைய நெருக்கடியான நிலைமையிலும் மனம் சளைப்பதற்கு இடங் கொடாமல் காட்டுக்குள் அகப்பட்டுக்கொண்ட புலி எந்தப் பக்கம் தப்பி ஓடலாமென்று நோட்டம் பார்ப்பது போல் நாற்புறங்களிலும் அவர் திருஷ்டியைச் செலுத்தி வருகிறார். ஸ்பெயினுக்குள் நுழைந்து ஜிப்ரால்டரைப் பிடித்துக்கொண்டு மத்தியத்தரை கடலின் மேலே வாயிலை அடைக்கலாமா? அல்லது துருக்கி மீது படையெடுத்து காகஸஸ் எண்ணெய்ச் சுரங்கங்களை பின்னாலிருந்து வளைத்துக் கொள்ளலாமா? என்று யோசிப்பதாக அறிகிறோம்.

ஸ்பெயினின் நிலைமை

ஜெனரல் பிராங்கோவின் நிலைமை சங்கடமானதுதான். செய்ந்நன்றி கொன்றவருக்கு உய்வில்லை என்பதை அவர் உணர்ந்திருக்கலாம். ஆனால் ஹிட்லருக்கு இடங்கொடுத்தால் மனக்கொதிப்பை அடக்கிக் கொண்டு நல்ல சமயத்தை எதிர்பார்த்திருக்கும் குடியரசுக் கோஷ்டியினர் சீறி எழுந்துவிடுவரோவென்ற பயம் அவருக்கு இருக்க வேண்டும். அதனால் நடு நிலைமை வகிக்கப் போவதாக அவர் சொல்லுகிறார். அதைக் குலைக்க யாரேனும் முன் வந்தால் மற்றொரு கட்சியின் உதவியை நாடப் போவதாகவும் பயமுறுத்துகிறார். நேசப்படைகள் ஐபீரியன் தீபகற்பத்தில் காலை வைக்க இடங் கொடுப்பது பெரிய அபாயத்தில் கொண்டு போய்விடலாமென்ற பயம் ஹிட்லருக்கும் உண்டு.

துருக்கி விஷயம் வேறு. அது சன்னத்தமாக இருந்தாலும், கனத்த அடியை தாங்கிகொள்ள முடியாதென்ற அசட்டு தைரியம் ஹிட்லருக்கு இருக்கும். அதனால் 1943-ம் வருஷத்தில் நடு நிலைமையை காப்பாற்றிக் கொள்ள முடியுமாவென்ற சந்தேகம் துருக்கியில் ஏற்பட்டிருக்கிறது. அந்த நாட்டின் பூர்வோத்தரமும் இப்போதைய நிலைமையும் முக்கியத்தை அடைந்துள்ளன.

இருபதாம் நூற்றூண்டின் சரித்திரத்தை நிஷ்பக்ஷவாதிகளான சரித்திராசிரியர்கள் பின் காலத்தில் எழுதும்போது, அந்த குடியரசை ஸ்தாபித்த பெரியாருக்கு அதில் பிரதான ஸ்தானத்தை கொடுத்தே தீர வேண்டும்.

துருக்கியின் நல்லகாலம்

ஐரோப்பாவின் பிணியாளி என்று வெகு காலம் அழைக்கப்பட்டு வந்தது துருக்கி; பல ஜாதிக்கும் இடங் கொடுப்பதால் ஏற்படும் கஷ்டங்களுக்கும், சிறந்த வீரர் இல்லாத பல ஹீனத்துக்கும் நீண்ட நாள் ஆளாகியிருந்தது. கான்ஸ்டான்டிநோபிளைப் பிடித்துக் கொண்ட வீரர்கள் தேனில் விழும் ஈயைப்போல் ஆடம்பர வாழ்வில் தோய்ந்தனர்; புதிய மதத்துக்கு மாறினர்; நிர்வாகப் பொறுப்பை வகிக்க வழி தெரியாது திகைத்தனர். இவற்றுடன் அந்நிய நாட்டுப் பணம் ஏராளமாக அங்கு வந்து விழுந்து ஜனங்களை மயக்கியது; சூழ்ச்சிகள் மலிந்தன; மேனாடுகளுக்குக் கொடுக்கப்பட்டிருந்த விசேஷ உரிமைகள் முன்னால் போகவொட்டாமல் வழி மறித்தன. துருக்கி முதல் மகா யுத்தத்தில் இறங்கியபோது அது அழுகின பிண்டமாக இல்லாத போதிலும் அழுக ஆரம்பித்திருந்தது. அனடோலியாவிலுள்ள விவசாயிகள் தான் கேவலமான ஆட்சியிலும் நெறி தவறாதிருந்தனர்

முதல் மகா யுத்தத்தில் வெற்றி பெற்ற நேச தேசங்கள் துருக்கி சுல்தான் மீது ஸேவர்ஸ் உடன்படிக்கையை சுமத்தினர். அந்த உடன் படிக்கையே துருக்கிக்கு நல்ல காலம் ஏற்படுவதற்கு அடி கோலிற்று. பொறுமையினால் தூண்டப்பட்டு புதிய அரசியல் வர்திகள் காலிபோலியைக் காப்பாற்றிய அனடோலிய இளம் சிங்கமாகிய முஸ்தபா கமாலை கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து பிரஷ்டம் செய்தனர். அந்த அஞ்ஞாத வாச காலத்தில் உருவம் குலைந்தேனும் துருக்கியருடையதாகவே துருக்கி இருக்கும்படி செய்ய வேண்டுமென்று பால்யத்தில் கொண்டிருந்த அபிலாஷையை நிறை வேற்றுதற்காக அவர் முயற்சி செய்யலானார், வயிற்றுக்குப் போதிய உணவில்லாவிடினும், உபயோகிப்பதற்கு சிறந்த ஆயுதங்கள் இல்லா விட்டாலும். கட்டுப்பாடு மிகுந்த அவருடைய படை அங்காரா காடுகளிலிருந்துஸேவர்ஸ் உடன்படிக்கையைக் கிழித்தெறியத் துடித்துக்கொண்டிருந்தது நேச தேசங்களுக்குப் பெரிய பிரச்னையாகி விட்டது.

நீண்ட கால யுத்தத்தால் மேல ஐரோப்பிய நாடுகள் களைத்திருந்தன; அனடோலிய கலகக்காரர்களுடன் மற்றொரு யுத்தத்தை ஆரம்பிக்க அவைகள் தயாராகஇல்லை. கிரீஸுக்கு மாத்திரம் முறுக்கு இருந்தது; ஆசியா மைனரிலும் அதற்கு ஆசையிருந்தது; யுத்த தளவாடங்கள், விமானங்கள், உணவுப் பொருள்கள் இவற்றிற்கும் அங்கு பஞ்சமில்லை. ஆடம்பரமும் ஒன்றுக்கு நான்காக இருந்தது. அங்காராவுக்கு போய்த் தான் நிற்பது என்ற உறுதியுடன் அரசர் கான்ஸ்டன்டைன் தலைமையிலேயே கிரேக்கப்படை கிளம்பியது ஆனால் முஸ்தபா கமாலின் உணர்ச்சி வேரூன்றியிருந்த துருக்கியப் படை முன் இது செல்லுமா? அங்காரா பாதுகாப்பு படலமானது சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டிய பெரிய சம்பவம்.

ராணுவத் துறையில் பிராபல்யத்துக்கு ஆசைப்படவில்லை முஸ்தபா கமால். தேசம் புத்துயிர் பெற்றெழும்படி செய்யவும், அந்நிய நாட்டினருக்கு சீட்டுக் கொடுத்தனுப்பவுமே அவர் விரும்பினார். படையெடுப்பு, தாக்குதல் அபாயம் நீங்கியதும் போர் வீரரான கமால் ஆசானாக மாறி ஜனங்களுடைய மனதை ஆகர்ஷிக்கலானார். அவர் நோக்கம் ஈடேறுமென்று நம்பிக்கை அவருடைய ஆரம்பகால ஸகாக்களில் பலருக்கு இல்லை அடித்துப் போட்டாப் போல் கிடந்த சுல்தானைக் கைவிட இஷ்டப்படவில்லை சிலர். இஸ்லாம் மார்கத்திலும் கலிபாவிடமும் பற்றுக் கொண்டிருந்தார்கள், மற்றும் சிலர் வீரச்செயல்களிலேயே நாட்டமுடையவர்களாக இருந்தார்கள் இன்னும் சிலர்.



முஸ்தபாகமால்

ஆயினும் யாரும் நம்பமுடியாத காரியத்தை செய்து முடித்தார் கமால். குடியரசுக்காக ரத்தத்தை சிந்த வேண்டி வந்ததற்கு அவர் பொறுப்பாளியில்லை. ஆரம்பத்தில் வெளிநாட்டு சத்துருக்களுக்கும் உள்நாட்டு துரோகிகளுக்கும் அவர் விஷப் பல்லைக் காட்ட வேண்டியிருந்தது. ஆயினும் மந்தையைக் காக்க புலித் தோலைப் போர்த்திக்கொள்ளும் ஆட்டிடையன் போலவே, அவர் மக்களின் ஆதர்சத்தைப் பாதுகாப்பதில் கருத்துக் கொண்டார். கமால் காலமாகிவிட்டபோதிலும் அவருடைய அடிச்சுவட்டை துருக்கியர் இன்றும் பின்பற்றி வருகின்றனர்.

மார்பை பிளக்கும் சுவாசகாசத்தை ஒழியுங்கள்.

சுவாசகாசத்தில் உங்கள் மார்பு வலி அதிகமாகின்றதா? ஓயாது மூச்சுதிணறல் அல்லது விடாத இருமலால் அவதிப்படுகின்றீர்களா? அப்படியாயின் பெப்ஸ் கிருமிநாசு சுவாச மாத்திரைகளை உட்கொள்ளுங்கள்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி, சுவாசத்துடன் கலந்து சுவாசப்பைக்குச் செல்லுகின்றது. பெப்ஸ் கபத்தை அறுத்தெறிந்து, அடைப்பை நீக்கி, இருமலை நிறுத்தி சுலபமாக மூச்சுவிட முடியும். பெப்ஸ் தொண்டைக்கு சமனமூட்டி, சுவாசப்பையைப் பலப்படுத்துகிறது. எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1 வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்:-மேஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உட்கொள்க.

PEPS

கிருமிநாச சுவாச மாத்திரைகள்.

'எங்கும் நிறை நியாகப் பிரும்மம்'

பரமாத்மா நாத ஸ்வரூபமாக விருக்கிறார். கேட்கும் ஒலியெல்லாம் அவர் நிறைந்திருப்பதால் எங்கும் நிறை நாதப் பிரும்மம் என்று கூறுவர். ஸ்ரீ ராமபிரானை சங்கீதத்தைச் சாதனமாகக் கொண்டு முக்தி பெற்ற மகான் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி. அவர் கீர்த்தனத்தைப் பாடாத வீடில்லை; ஊரில்லை. எனவே அவரை "எங்கும நிறை தியாகப் பிரும்மம்" என்பது மிகவும் பொருத்தம். வருஷா வருஷம் தை மாதம் பகுள பஞ்சமி யன்று திருவையாற்றில் இவரது ஆராதனை கொண்டாடப்படுகிறது. இந்த வருஷமும் 26-ந் தேதி கொண்டாடப்போகிறார்கள்.

அந்நிய நாட்டுக் கொள்கை

கமால் பாஷா விதித்தபடி ஒரு பக்கத்தில் ரஷ்யாவுடனும் மற்றொரு பக்கத்தில் பிரிட்டனுடனும் நட்புடன் வாழ்ந்து வர வேண்டுமென்பதே 15 வருஷ காலமாக துருக்கியின் அந்நிய நாட்டுக் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது. மத்தியதரைக் கடலில் ஆதிக்கம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் ஆசை இத்தாலிக்கு இருந்து வந்ததால், அதைத் தடுக்க துருக்கி பிரிட்டனுடன் உறவு ஏற்படுத்திக் கொண்டது. கருங்கடல் நாடுகளிலும் ஒன்றாக அது இருப்பதால் புரட்சிக்குப் பிறகு மிகுந்த வலிமையைப் பெற்ற ரஷ்யாவுடனும் அது சிநேக பாவத்துடன் இருந்து வருகிறது.

டார்டனல்ஸ் ஜல சந்தியில் துருக்கிக்கு நல்ல செல்வாக்கு இதைத் தவிர அதற்கு சில முக்கிய பலங்கள் இருக்கின்றன. ஐரோப்பாவிலுள்ள துருக்கி பாலத் தலைப்பிலுள்ள கொத்தளம் போன்றது. அட்ரியா நோபிள் ஒரு பெரிய கற்கோட்டை. கான்ஸ்டான்டிநோபிளை வட பக்கத்தில் சாடல்ஜா அரணும், காலிபோலி தீபகற்பத்தின் ஐரோப்பிய மூலையிலுள்ள பூலேர் அரணும் பாதுகாக்கின்றன. டார்டனல்ஸ் ஜல சந்திப் பிரதேசமும் பெரிய கொத்தளமே, இவற்றிற்கப்பால் துருக்கியரின் ஜன்மபூமியாகிய அனடோலியா இருக்கிறது. இதில் பெரும் பாகம் பீட பூமி; ஏஜியன் கடல், கருங்கடல், மத்தியதரைக் கடல் முதலிய மூன்று பக்கங்களிலும் சம வெளியோ அல்லது சிறு குன்றுகளோ சூழ்ந்திருக்கின்றன. ரயில் ரஸ்தா மார்க்கங்களுடைய கணவாய்களே இல்லை. இருந்து வரும் கணவாய்கள் பாதுகாப்புக்கு சவுகரியமாக அமைந்திருக்கின்றன. கிழ் புறத்தில் ரஷ்ய எல்லையில் இந்தப் பீட பூமி மலைப்பாங்கானதாகவும் பொட்டலாகவும் இருக்கிறது. பெரிய சைன்யம் அங்கு பட்டினி கிடந்து சாகவேண்டும். சிறிய சைன்யம் ஆள் பலக்குறைவால் திண்டாட வேண்டும்.

ஆட்சி முறை

மேலும் துருக்கிய ஆட்சி முறையானது பொதுஜன அபிப்பிராயத்தை பிரதி பலிப்பதாக இருக்கிறது; முற்போக்கான தன்மையும வலியுமுள்ளது; பல சீர்திருத்தங்களையும் நிறைவேற்றி வைத்திருக்கிறது, சுல்தான் ஆட்சியை ஒழித்ததையும், மதக்கோர்ட்டுகளையும், ஸ்தாபனங்களையும் லௌகீகமயமாக்கியதையும் பழைய கொள்கையே பெரிதென்று நினைப்பவர்கள் ஆட்சேபிக்கலாம்; வகுப்புப் போராட்டத்தை அது ஒழித்திருப்பதை பொதுவுடமை வாதிகள் ஆட்சேபிக்கலாம். ஆனால் நியாய புத்தியுள்ள எவரும் துருக்கிய சர்க்கார் பல துறைகளிலும் சாதித்ததை பாராட்டாமலிருக்க முடியாது.

பெருந் தொல்லை தீர்ந்தது

என்று மில்லாத ஒற்றுமை இன்று துருக்கிய ஜனங்களிடையே இருந்து வருகிறது கிரீஸுடன் ஜன மாற்றம் செய்து கொண்டார் கமால், சிறுபான்மையினரின் தொல்லை தாங்க முடியாமல் சர்ஜன் சதை வளர்ச்சியை வெட்டிக் கழிப்பது போலிருந்தாலும் இந்த முறையால் பெரிய தொல்லை தீர்ந்தது. எஞ்சியுள்ள சிறுபான்மை வகுப்பினர் சம்பந்தமாகத் துருக்கி கவலைப்படவேண்டியதில்லை

துருக்கிய சேனை பிரசித்தி வாய்ந்தது. நல்ல பயிற்சி; கட்டுப்பாடும் அதில் அதிகம். கடற்படை குறைவுதான்; இருந்தாலும் ஜல சந்தியைப் பாதுகாக்க போதுமானது. அவசியமேற்பட்டால் நேசதேசக் கடற்படையின் பூரண ஆதரவை அது நம்பியிருக்கலாம்.

எல்லாவற்றிலும் முக்கியமாக துருக்கி நாணயமுள்ள நாடு உடன்படிக்கைகளை ஒழுங்காக அது நிறைவேற்றி வந்திருக்கிறது. அதன் மூலம் கீழ ஐரோப்பாவிலிருந்து இந்தியா எல்லைவரையில் சமாதானம் நிலவும்படி அது செய்திருக்கிறது. நட்பு பூண்ட தேசங்களிடத்தில் விசுவாஸமும் நல்லுணர்ச்சியும் துருக்கியின் முக்கிய அந்நிய நாட்டுக் கொள்கைகள். இதனால் சமீப கிழக்கு தேசங்களில் துருக்கிக்கு மிகுந்த மதிப்பும் செல்வாக்கும் இருந்து வருகிறது. துருக்கி மீது ஹிட்லர் பிரவேசிக்கும் பக்ஷத்தில் அவருடைய நோக்கம் சுலபமாக ஈடேறாது. புடம் போட்ட தங்கம் [illegible] துருக்கி அதிகம் பிரகாசிக்கும்.

குட்டிக்கதை

★

கண்டதுமில்லை கேட்டதுமில்லை

★

"ரேவதி" எழுதியது

"இது பகற்கனவில்லை! உண்மை சம்பவம்தான்! நான் நன்ருக விழித்துக் கொண்டுதான் இருக்கிறேன்!" என்று அவன் தன் கதையைச் சொல்லிமுடித்தான்.

அவன் சொன்ன கதை இதுதான்.

மங்களம், தென் இந்தியாவில் ஒரு கிராமத்தில், பிராமண குலத்தில் பிறந்த பெண். அவள் தகப்பனார் அந்த கிராமத்துப் பெரியவர்களில் ஒருவர். அவள் தமயன்—தன் சிறிய தகப்பனருக்கு தத்து அளிக்கப்பட்டவன்-அந்த கிராமத்திலேயே மிகவும் பணக்காரன்.

மங்களம் பக்கத்து கிராமத்து மிராசுதாருக்கு வாழ்க்கைப் பட்டாள். பதினைந்து வருஷங்களுக்குக் குடும்ப வாழ்க்கையைத் தன் கணவனுடன் நடத்தினாள். பிறகு விதவையானாள். அவளுக்கு மக்கட் பேறு ஏற்படவில்லை. ஏராளமான சொத்துடன் பிறந்தகம் திரும்பினாள். பிராமண குலத்தில் பிறந்தவள். அதிக படிப்பு இல்லாவிட்டாலும் உலக அனுபவம் உண்டு அப்பொழுது அவளுக்கு வயது முப்பது.

அந்த கிராமத்துக்கு ஒரு மைல் தூரத்தில், பெருச்சாளி வேட்டையாடி ஜீவிக்கும் குறவர் கூட்டம் ஒன்று முகாம் போட்டது. அவர்களில் சிலர், ஊசி, கருகமணி, நரிப்பல், கோரோசனை, ஓலை ஊதல்கள் இவைகளை எடுத்துக்கொண்டு அக்கிரஹாரத்துக்கு அருகே வந்து கூவினார்கள், அவர்கள் அழுக்கடைந்த உடைகளையும் பயங்கரமான ரூபத்தையும் பார்த்து சிறு குழந்தைகள் வீறிட்டழுதன! பெரியவர்கள் அருவருப்புடன் கதவைத்தாளிட்டுக் கொண்டார்கள்.

மங்களம், வாசலில் நின்றபடியே இதை எல்லாம் வேடிக்கை பார்த்தாள். குறவர்கள் ஏதோ கொடிய பாஷையில் வைது கொண்டே சென்றார்கள். கந்தலாடை உடுத்து, பாசி மணிகளால் தன்னை அலங்கரித்துக்கொண்டு, பார்வைக்கு பயங்கரமாக இருந்த ஒரு கிழக் குறத்தி, சற்றே தயங்கி நின்றாள். மங்களம் சட்டென்று உள்ளே சென்று, ஒரு கை அரிசியை எடுத்து வந்து, அவளை நோக்கி நடந்தாள். அரிசியை வாங்கிக்கொண்டு, கோரமாகச் சிரித்துவிட்டு அவள் சென்றாள்.

மங்களம் அன்று முழுவதும் சொப்பன உலகத்தில் இருந்தாள். அவள் மனதில் விசித்திரமான எண்ணங்கள் உதித்தன. இது வரையில் ஜாதிக் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடந்த அவள் மனதில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. தன் தற்போதைய வாழ்க்கையை, சுதந்திரம் அற்ற, சம்பவங்கள் நிகழாத வேடிக்கை இல்லாத கூண்டில் அடைத்த ஒரு கிளியின் வாழ்க்கையாகக் கருதினாள். அக்குறவர்கள் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்துகிறார்கள். என்பதை அறிய அவள் மனம் துடித்தது.

அன்று இரவு குறவர் கூட்டத்தில் ஒரே கேளிக்கை. அவர்கள் ஆண் பெண் வித்தியாசமின்றி, குடித்துப் பாடிக்கொண்டிருந்தார்கள். அவர் வாழ்க்கையில் ஒரு விதமான கட்டுப்பாடும் இல்லை. அவர்கள் சுயேச்சைக்கு எல்லை இல்லை. இவர்கள் நாலு நாட்களுக்கு மேல் ஒரு இடத்தில் தங்கமாட்டார்கள். கிடைத்ததைத் தின்று, உடுத்து, தமாஷாகக் காலத்தைப் போக்குவார்கள். அங்கு வந்த மங்களத்தையும் தங்களில் ஒருத்தியாகப் பாவித்துக் குதித்துப் பாடினார்கள்.

மறு நாள் பொழுது விடிவதற்குள் குறவர் கூட்டம் உலகத்தைச் சுற்றப் புறப்பட்டுவிட்டது. மங்களம் தன் புது வாழ்க்கையின் இன்பங்களை ஆவலுடன் எதிர் பார்த்தாள்.

இவர்தான் ஸ்ரீமதி அன்னபூரணி! சமீபத்தில் சென்னை சங்கீத வித் சபையினுதரவில் நடைபெற்ற ஸ்ரீ சுவாதித் திரு நாள் பாட்டுப் போட்டியில் முதன்மையாக நின்றார். இவருக்கு ஸேது பார்வதிபாய் பதக்கம் பரிசளிக்கப்பட்டது.

சிறு கதை

வாழ்ந்த குடும்பம்

(சாமி)

சுந்தரம் இனிய முகத்தினன் ஆடம்பரமற்ற உடை உடுத்துபவன். பிரிய வாக்குள்ளவன், நற்குணத்தினன். நல்லோரை சோதிப்பது இயற்கையின் இயல்பல்லவா! சுந்தரம் சிறு வயதிலேயே தாய்தந்தையரை இழந்தவன், தன் சுயப் பிரயாசையின் பேரில் பத்தாம் வகுப்புவரையில் படித்துத் தேறினன். பின் அவனிடம் பிரியம் காட்டிய ஆசிரியர் ஒருவரின் உதவியால் இந்திய வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றான். பின் அவன் வேலைக்கு பல நாள் கஷ்டப்படவில்லை. ஜில்லா போர்ட் ஆதிக்கத்தின் கீழ் உள்ள ஒரு கிராம வைத்தியசாலையில் மாதம் 60 ரூபாய் சம்பளத்தில் வேலை கிடைத்தது.

பொன்னேடை என்பது ஒரு சிறிய கிராமம். அந்த கிராமத்தில் சுமார் நூறு வீடுகள் இருக்கும். இவைகளில் இரண்டு வீடுகளே கவனிக்கத்தக்கன. அக்கிராமத்தைச் சுற்றி எங்கும் நஞ்சை நிலங்கள். காலை நேரத்தில், நிலங்களில் 'சலசல்' வென்று ஓடிப் பாயும் நீரோடைகளின் ஓரத்தில் உட்கார்ந்து, உறங்கிக்கொண்டிருக்கும் நீர் பறவைகளும் நிலத்தின் ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு மீன்களைத் துரத்திச் செல்லும் சிறு புள்ளினங்களும் கண்ணைக் கவரும் காட்சிகள். அங்கங்கே நாத்தங்காலில் செழித்தடர்ந்து வளர்ந்து ஆடி அசையும் இளம் பயிர்களின் இனிய பசுமை நிறம் மனதை மகிழ்விக்கும். இத்தகைய எழிலோடு கூடிய புலன்களில் பாதி தெற்குத் தெரு சோமுப் பிள்ளைக்கு ஒரு காலத்தில் சொந்தமாயிருந்தது. ஆனால் இப்பொழுது அக்கிராமத்தைச் சுற்றியுள்ள நிலங்களெல்லாம் வடக்குத் தெரு முத்தப்பிள்ளைக்கு உரியன.

சோமுப் பிள்ளை ஒரு காலத்தில் அக்கிராமத்தில் மிக்க செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார். அக்கிராமவாசிகளெல்லோரும் அவர் ஏவலாளராய் நடந்து வந்தார்கள். ஆனால் முத்தப்பிள்ளை மட்டில் அவருக்கடுத்தபடியான பணக்காரர். அவர் மிக்கக் கபடன், சோமுப் பிள்ளையின் செல்வாக்கைக் கண்டு மனம் புழுங்கி வந்தார். அவருக்கு ஏற்ற காலமும் வந்தது. சோமுப் பிள்ளை தன் மகனுக்கு பெரிய இடத்தில் விவாகம் செய்ய ஏற்பாடு செய்தார். கலியாணம் வெகு ஆடம்பரமாக செய்வதென்றும் திட்டம் போடப்பட்டது. ரூபாய் பதினாயிரம் தேவையாயிருந்தது. அந்தக் காலம் அவர் நிலங்களிலெல்லாம் பயிர் நடவாயிருந்தது. அவ்வருட ஆதாயத்திலிருந்து திருப்பிக் கொடுத்து விடலாமென்றெண்ணி அவர் விரும்பிய தொகையைக் கடன் பெற வெண்ணினர், முத்தப்பிள்ளை இச் சந்தர்ப்பத்தைத் தமக்கேற்றதாகக் கைக்கொண்டார். அவர் விரும்பிய தொகையை தானே கடனாகக் கொடுத்தார். கலியாணம் வெகு சிறப்பாக நடந்தது.

பின் சோமுப் பிள்ளைக்குச் சோதனை காலம் போலும். அவர் மகன் ஒரு வருடத்திற்குள் இறந்துவிட்டான். மனதில் சொல்லொணாக் கவலை. அவ்வருடம் நான்கு ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த நெல் ஒரு ரூபாயாயிற்று. சோமுப் பிள்ளையால் அவ்வருடம் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. முத்தப் பிள்ளை சோமுப் பிள்ளையின் நிலங்களை எல்லாம் அடமானமாகப் பெற்றார். சோமுப் பிள்ளை ஒவ்வொரு வருடமும் கடனைத் திருப்பிக் கொடுக்க முயற்சித்தார். நெல் விலை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போயிற்று. வருடங்கள் ஐந்தாகிவிட்டன. கடன் வட்டியுடன் சேர்ந்து பெருந் தொகையாகிவிட்டது. சோமு நிலங்களில் சிலவற்றை விற்றுவது கொடுப்போமென்று கருதினர். உலகில் பொருளாதார மந்தம். யாரும் நிலம் வாங்குவாரில்லை. முத்தப் பிள்ளை வழக்குத் தொடுத்தார். சோமுப் பிள்ளையின் பெரும் பகுதியான நிலங்களை தன் கடனின் ஒரு பகுதிக்கு எடுத்துக் கொண்டார். சோமுப் பிள்ளைக்குத் தங்கியது அவர் வீடுதான். முத்தப் பிள்ளைக்கு கடனில் பாக்கி சேர வேண்டியது ரூபாய் ஆயிரமிருந்து வந்தது. சோமுப் பிள்ளை மன ஏக்கத்தால் வியாதியுற்று உயிர் துறந்தார்.

சுந்தரம் வைத்தியசாலை. சோமுப் பிள்ளையின் வீட்டிற்கு எதிர்புறத்திலுள்ள சிறு திடலிலுள்ளது. சுந்தரம் அடிக்கடி தன் எதிர் வீட்டை நோக்குவான். ஒருபக்கம் இடிந்து வீழ்ந்துகிடக்கும் அப்பழைய பெரிய வீட்டின் முன் ஓர் இளமங்கை அவன் பார்வையில் வீழ்வாள். அவள் அதிக ஆபரணங்கள் பூண்டில்லை. ஆனால் அவள் இயற்கை அழகு அவன் உள்ளத்தைக் கவர்ந்தது.

ஒரு நாள் காலையில் சுந்தரம் தன்னிடம் சிகிச்சைக்கு வந்தவர்களை எல்லாம் கவனித்துவிட்டு தன் நண்பர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தான். அச்சமயம் அடக்கமே உருவெடுத்து வருவதுபோல் ஒரு பெண் மிக்க அமைதியாக நடந்து வந்து அவனை அணுகி நின்றாள். அவன் அவளை நோக்க தன் உடலில் ஒரு உணர்ச்சி பெற்று அவள் எதிர் வீட்டுப் பெண்ணென்றுணர்ந்தான். அவளை நோக்கி, 'உனக்கென்ன வேண்டும்?' என்று பிரியமாகக் கேட்டான்.

அவள், 'எனக்கொன்றுமில்லை. என் தாயார் எதிர்வீட்டில் மிக்க நோயுற்றிருக்கிறாள். அவளால் நடக்க முடியவில்லை. எங்களுக்கு இவ்வூரில் ஒருவரும் துணையில்லை. ஆகையால் அவளை இங்கு எடுத்துவரக்கூடவில்லை. தயவுசெய்து நீங்கள் எங்கள் வீடுவரையில் வந்து அவளைக் கவனித்தால் பெரும் உதவியாகவிருக்கும்" என்றாள்.

தஞ்சை அரமனையில்



தஞ்சை அரமனையிலுள்ள ஆயுதச்சாலையும் காவற் கூடமும். —மாருதி

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்,
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

ரூ. 10,000 பெறுமான கடியாரங்கள் இலவசம்.

கலா டெல் (ரிஜிஸ்டர்ட் உபயோகித்தால் பல் கேசங்களும் கறுப்பாக மாறி, பிறகு எப்பொழுதுமே கறுப்பாக இருந்துவரும். எமது ஸ்வாமியால் அறிவிக்கப்பட்டது. மூளைக்குச் சிறந்த டானிக் கண் பார்வையை சீர்படுத்தி, மண்டையை குளிர்ச்சியாக வைத்திருக்கும். பாட்டில் விலை ரூ. 1-15-0. மூன்று பாட்டில்கள் ரூ. 5/-

இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட் ஒவ்வொரு புட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கை கடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும் அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும். குறிப்பு: சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.

LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)
(EAB)

30 அடி சுவரில் ஏறுகிறார்!

அமெரிக்க கண்காணிப்புப் படையினருக்கு விசேஷப் பயிற்சி அளிக்கப்படுகிறது. லண்டனில் அவர்கள் பலவிதமாகப் பயிற்சி பெறுகின்றனர். படத்தில் ஒரு ரேஞ்சர் 30 அடி உயரமுள்ள சுவரில் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறப்பயில்கிறார்.

சுந்தரம் உடனே புறப்பட்டு அவளுடன் சென்றான். எதிர் வீட்டில் எங்கு நோக்கினும தூசிபடிந்த பெட்டிப் பேழைகளே நிறைந்து கிடந்தன: அவ்வீட்டின் பெரும் பகுதி புழக்கத்திலில்லாததனுல் பாழடைந்து கிடந்தது. அப்பெண்மணி சுந்தரத்தை ஒரு சிறு அறைக்குள் அழைத்துச் சென்றாள். அங்கொரு மூலையில் அவள் தாயார் ஒரு கட்டிலின் மேல் கிடத்தப்பட்டிருந்தாள். சுந்தரம் அவளை நன்காராய்ந்து தக்க மருந்து கொடுத்தான். பின்பு தன் வைத்தியசாலையை அடைந்து சில பழவகைகளும் சிறு ஆகார வகைகளும் அனுப்பி வைத்தான். பின் தினந்தோறும் அடிக்கடி சென்று கவனித்து வந்தான். அவளும் குணமடைந்து வந்தாள்.

ஒரு நாள் சுந்தரம் அவளிடம் பத்து ரூபாயைக்கொடுத்து 'அம்மா, இதை உங்கள் செலவிற்கு வைத்துக்கொள்ளுங்கள்" என்றான்.

அவள், 'தம்பி, நீங்கள் இவ்வளவு தூரம் என்னைக் காப்பாற்றியதே எங்களுக்குப் பெருத்த உதவியாகும். நாங்கள் செய்து விற்கும் பலகாரத்தொழிலில் எங்கள் ஜீவனத்திற்கு போதுமான வருப்படி கிடைக்கிறது அதுவே எங்களுக்குப் போதும். நீங்களும் எங்கள் இனத்தவரே என்று நேற்று செல்லம் சொன்னாள். ஆகையால் நீங்கள் எப்பொழுதும் இப்பொழுது காட்டிய கருணையோடு இருந்தாலே எங்களுக்கு பரம சந்தோஷம். நீங்கள் அந்த ரூபாயை உங்கள் செலவுக்கு வைத்துக்கொள்ளுங்கள்! என்றாள். சுந்தரம் தனக்கு செலவுக்குப் போதுமான பணமிருக்கிறதென்று எவ்வளவு கூறியும் அவள் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டாள்.

பத்து தினங்கள் கழிந்தன. ஒரு நாள் செல்லம் வீட்டிற்கெதிரில் ஒரு தபாற்சேவகன் வந்து நின்று கொண்டு அவள் தயார் பெயரைச் சொல்லி அழைத்தான். உடனே அவள் வெளியே வந்தாள். சேவகன் அவளுக்கு இருபது ரூபாய் பணம் வந்திருப்பதாகக் கூறி கொடுத்து விட்டு ஒரு கடிதத்தும் கொடுத்துச் சென்றான். செல்லம் அக்கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். அதில் அவள் தந்தை உயிரோடிருந்த போதுஅவரிடம் அக்கரைசீமைக்குச் செல்ல பதினைந்து ரூபாய் பணம் வாங்கிச் சென்ற முருகன் என்னும் குடியானவன் தற்போது நல்ல அந்தஸ்தில் இருப்பதாயும் அவன் தன் நன்றியை செலுத்தும் முறையில் இச்சிறு தொகையை மாதம் மாதம் சென்னையிலுள்ள தன்ஏஜண்டு மூலம் அனுப்புவதாயும் எழுதியிருந்தது. அதைப் பார்க்க தாயும் மகளும் சந்தோஷித்தனர்.

மறு நாள் காலை சுந்தரம் தன் வைத்தியசாலையில் உட்கார்ந்தான். செல்லமும் அவள் தாயாரும் வர எழுந்து நின்றான். செல்லத்தின் தாயார் ஒரு தட்டில் ஒரு பட்டும் சில பழங்களும் எடுத்து வந்ததை அவன் கையில் கொடுத்து "தம்பி எனக்கொத்தாசை செய்ததற்காக நான் ஏதாவது மரியாதை செய்ய வெகுவாக இஷ்டப்பட்டேன். ஆனால் என் வறுமை அதற்கிடந்தரவில்லை. நேற்று எதிர்பாரா வகையில் ஒரு இருபது ரூபாய் கிடைத்தது. அதைக்கொண்டு இப்பட்டை வாங்கினேன். இதை ஏற்றுக் கொள்ளுங்கள்," என்றாள்.

சுந்தரம் ஆச்சர்யத்தோடு, அம்மா நீங்கள் இவ்வளவு அன்போடு கொடுப்பதை நான் பெற்றுக்கொள்கிறேன். ஆனால் இதற்குப் பதிலாக இந்த ரூபாய்க்கு செல்லத்திற்கு நல்ல புடவையாக வாங்கிக்கொடுத்திருந்தால் நான் மிக்க சந்தோஷமடைந்திருப்பேன்! என்றான்.

பல மாதங்கள் கழிந்தன. மாதந்தோறும் செல்லத்தின் தாயாருக்கு இருபது ரூபாய் தவறுமல் வந்துகொண்டிருந்தது. இப்பொழுது அவர்களுக்கு ஜீவனத்திற்குக் கஷ்டமில்லை. ஆனால் செல்லத்தின் தாயாருக்கு மனோகஷ்டமதிகரித்தது. நோய் வாய்ப்பட்டாள். சுந்தரத்தின் சிகிச்சை பயன்படவில்லை. ஒரு நாள் செல்லம் ஆத்திரத்தோடு சுந்தரத்தின் வைத்தியசாலைக்குள் ஓடி அவனை அவள் தாயார் உடனே அழைத்து வரும்படி கூறினதாகச் சொன்னாள். சுந்தரம் எழுந்து விரைந்து சென்றான். செல்லத்தின் தாயார் அவன் கரங்களை பற்றிக்கொண்டு, தம்பி உங்கள் உதார குணத்திற்கு நான் என்ன பிரதி உபகாரம் செய்யக்கூடும்? இது வரையில் பணம் அனுப்பி வந்த நீங்கள்தான் என்று செல்லம் சொன்னாள். நான் கையெழுத்திட்டனுப்பிய ரசீது உங்களிடம் இருக்கக் கண்டாளாம். என் கடைசி காலம் நெருங்கிவிட்டது. என் கடைசி கால கோரிக்கை ஒன்று. அதை உங்களிடம் சொல்லத்தான் அழைத்து வரச் சொன்னேன்? என்றாள்.

அம்மா, உங்கள் கோரிக்கை எதுவாயிருந்தாலும் நான் முடித்து வைக்கிறேன். சொல்லுங்கள்! என்றான்.

அவள். 'இவ்வூர் முத்தாப் பிள்ளையை நீங்கள் அறிவீர்கள். அவனுக்கு என் புருஷன் கொடுக்கவேண்டிய கடனுக்கு எஞ்சியுள்ள இவ் வீட்டைப் பிடுங்கி கொள்வதாகவும் இல்லாவிடில் என் கண்மணி செல்லத்தை அவனுக்கு இந்த வயதில் விவாகம் செய்து கொடுக்கும்படியும் என்னை இதுவரையில் பயமுறுத்தி வந்தான். எனக்கு இவ்வூரில் யாரும் ஆதரவில்லாததால் நான் என்ன செய்வதென்று ஏக்கமுற்றிருந்தேன். ஆனால் உங்களைக் கண்டதுமுதல் என்மனதில் திடமுண்டாயிற்று. இதோ என் செல்வத்தை உங்கள் வசம் ஒப்புவிக்கிறேன் அவளை ஏற்றுக் கொள்ளுங்கள். என்றாள்.

சுந்தரம் செல்லத்தை அணைத்துக் கொண்டு, 'அம்மா, உங்களுக்கு அவள் கவலை வேண்டாம். அவளை நான் சந்தித்து முதலே அவளை அடைய விரும்பினேன். முத்தாப் பிள்ளை இவ் வீட்டையே எடுத்துக் கொள்ளட்டும்,' என்றான், செல்லம் தாயார் கண்மூடினாள்.

சுந்தரமும் செல்லமும் இனிய தம்பதியானார்கள். அதிர்ஷ்டவசமாக அரசாங்கத்தார் வெளியிட்ட கடன் நிவாரணச் சட்டப்படி அவர்கள் வீடும் அவர்கள் வசமே தங்கி விட்டது.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

நவயுகப் பிரசுராலயம்.

பாரதியார் படம்	0	8
ஸப்த நதிகள்	0	8
மேஹர் உன்னிஸா	0	8
வார்தா திட்டம்	0	8
வாழ்க்கைச் சிற்பம்	0	6
திரிபுரி காங்கிரஸ்	0	6
அடிவானத்துக்கு அப்பால்	0	6
நிர்மாணம்	0	4
மதனி	0	4
ஆறு கதைகள்	0	4
விவாகமானவர்களுக்கு ஒரு யோசனை	0	4
சைவ உணவு எது?	0	4
அவன் அமரன்	0	4
தளபதி டிகால்	0	3
அடிமைத் தாய்	0	4
பக்த குசேலா	0	3
நாசகாரக் கும்பல்	0	3
வ. ரா சரிதம்	0	2
மந்தரை சூழ்ச்சி	0	2
ஆர்க்கிமிடீஸ்	0	2
சுகாதாரச் சட்டவிளக்கம்	0	1

கலைமகள் பிரசுரம்

முருகன் ஓர் உழவன்	1	8
முகுதினி	1	8
மாயா விநோதினி	1	8
பைரவி	1	8
விதியின் செயல் முதலிய கதைகள்	0	6

சுதேசமித்திரன் புத்தகசாலை.

ஆயுர்வேத ரத்ன எஸ், பி. பிள்ளையின்
நெக்டார்.
சகல வயிற்று நோய்களையும் தீர்க்கும்
5 அவுன்ஸ் புட்டி மருந்துக்கு ரூ. 1—?—0,
பற்பொடி
பல் சுத்திக்கும், வியாதிகளுக்கும் சிறந்தது
20 பொட்டலங்கள் ரூ. 1—4—0
தபால் செலவு வேறு.
ஸ்வர்ண ஸ்டோர்ஸ்,
19, மீரான் சாயுபு தெரு.
மவுண்ட் ரோடு :: சென்னை.

WANTED

Ladies and Gentlemen desirous of earning Rs. 100/- to Rs. 300/- P. M. in their spare time, without any investment at their place. Please write for full particulars to :

LONDON C. COMPANY,
P.B. 165. S. M. M. LAHORE.

ஸரஸாவின் தலை தீபாவளி!

"உமாஸந்தானம்"

சாம்பசிவய்யர் வீட்டில் ஒரே குதூஹலம். ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் பரபரப்புடன் காணப்பட்டனர்; எல்லோரையும்விட ஸரஸாவின் மனம் விசேஷ உற்சாகத்துடனிருந்தது. ஆம் மறுநாள் தீபாவளி. அதிலும் தலை தீபாவளி ஸரஸாவிற்கு. அவள் மனதிற்குள், எப்போ வருவாரோ, என் கண் முன் நிற்பாரோ என்று பாடிக்கொண்டேயிருந்தாள்.

இனி ஸரஸா அவள் தந்தை முதலியவர்களை அறிமுகப்படுத்துவோம். ஸாம்பசிவய்யர் சென்னையில் ஒரு பெரிய வக்கில். ஸரஸா அவருடைய செல்வப் புதல்வி. அவளுக்கு நான்கு சகோதரர்கள் உண்டு. தங்கமான பெண். மாநிறமாய் இருப்பாள். களை நிறைந்த முகம். பார்ப்பவர்களை வசீகரிக்கும் கண்கள். எப்பொழுதும் புன்சிரிப்பு தவழும் முகம். நல்ல புத்திசாலி. அவள் வீணை வாசித்து கேட்பது போன்ற மகிழ்ச்சி அவள் தகப்பனருக்கு வேறெதுவும் இல்லை. அவள் தமயனுக்கு அவள் மீது அலாதி பிரியம். கடைசி தம்பி மணிக்கு அக்கா தான் எல்லாம் செய்ய வேண்டும். சிறு வயதிலிருந்தே தெய்வ பக்தியுடைய பெற்றோர்களால் வளர்க்கப்பட்டதினால் கிருஷ்ணனிடம் ரொம்ப பக்தி. குழந்தையாயிருக்கும் பொழுது அக்கிருஷ்ணனையே மணக்கப்போவதாகச் சொல்லுவாள்.

ஆனி மாதம் ஸரஸாவிற்கும் கிருஷ்ணனுக்கும் சிறப்பாய் விவாஹம் நடந்தேறியது. விவாஹமானதும் எல்லோரும் திருப்பதி போயினர். அவ்வேழுமலையான் கடாக்ஷம் காதலர்கள்மீது பூரணமாய் விழுந்தது. அந்த அழகிய மலைப் பாதையிலே, அடர்ந்து வளர்ந்திருக்கும் விருக்ஷங்களிடையே, மாலை வேளை வெகு ரம்யமாய் இருந்தது. மலை ஏறும்பொழுது ஐந்து மணி ஆகிவிட்டது. பக்ஷிகள் கூடு திரும்பும் சமயம். கதிரவன் மேற்றிசையில் மறைந்தான். சந்திரன் தன் குளிர்ந்த கிரணங்களால் புவியை அணைக்கலானான். இப்படி இன்பம் பொங்கும் சமயம் கிருஷ்ணன் மெதுவாக வந்து டோலியில் போகும் ஸரஸாவின் கண்களைப் பொத்தினான். அவள் சொல்லொணாத இன்பத்தை அடைந்தாள். மெதுவாக அவன் கைகளை விலக்கி கண்களில் ஒற்றிக்கொண்டாள். அவனை தன் கருவிழிகளால் அன்பு ததும்பப் பார்த்தாள். மறு விநாடி நாணத்தால் தலை குனிந்தாள். அவளால் பேச முடியவில்லை. சில நிமிஷம்வரை இருவரும் மௌனம் சாதித்தனர். பிறகு கிருஷ்ணன் மெதுவாகப் பேச ஆரம்பித்தான். பிறகு இருவரும் உல்லாசமாய் பேசிக்கொண்டே மலையேறும் சிரமம்கூட தெரியாமல் திருப்பதி போய்ச் சேர்ந்தனர். அங்கு ஸ்ரீனிவாச பெருமாளை மனதார துதித்து திரும்பினர். ஊர் வந்ததும் மறுநாளே லீவு கிடைக்காதபடியினால் கிருஷ்ணன் தன் கல்கத்தாவிற்குப் போக நேர்ந்தது.

* * * *

திருமணம் நாளிலிருந்து அது வரை இன்பவெள்ளத்தில் மூழ்கி இருந்த ஸரஸாவிற்கு கிருஷ்ணன் போனதும் எல்லாம் ஒரே சூன்யமாய் இருந்தது. ஒருவருக்கும் தெரியாமல் மாடி வராண்டாவில் நின்றுகொண்டு கிருஷ்ணன் காரில் ஏறிக்கொண்டு போவதைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவனும் அவளை அன்புடன் பார்த்து விடைபெற்று சென்றான். கார் மறையும் வரையில் ஸரஸா அதையே பார்த்துக் கொண்டிருந்தாள். கார் மறைந்ததும் கண்களில் பலபலவென்று நீர் உதிர்ந்தது. உலகத்தையே மறந்தாள். ஸரஸா என்றழைத்த அவள் மன்னியின் குரலைக் கேட்ட பிறகுதான் அவளுக்கு சுய உணர்வு வந்தது. பரபரப்புடன் கண்களை துடைத்துக் கொண்டு கீழே சென்றாள்.

அவள் மன்னி அவளை பார்த்தவுடன் "ஸரஸா, ஏன் கண் கலங்கி இருக்கிறது? சீக்கிரமே திரும்பி வருவார் கவலைப் படாதே. என்ன சொல்லிவிட்டுப் போனார்?" என்று பரிகாசம் செய்யத்தொடங்கினாள். ஸரஸாவிற்கு இவை தேன் பொழியும் மொழிகளே போல் இருந்தன. ஆனாலும் மேலுக்கு கோபம் கொண்டவளைப்போல், 'போ மன்னி! உனக்கு வேறே வேலையில்லை. எப்போதும் என்னை கேலி செய்வதுதான்' என்றாள். "இல்லை ஸரஸா, நீ மாடியிலிருந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தாயே அதனால்தான் உனக்கு ஆறுதல் சொல்ல வந்தேன். என் மேல் கோபிக்கலாமா?" என்றாள் மன்னி.

'நான் ஒண்ணும் யாரையும் பார்த்துக்கொண்டு இருக்கவில்லை. நான் மாடியில் பின் வரண்டாவில் தைத்துக் கொண்டு இருந்தேன்.'

'ஆமாம், ஆமாம். எனக்குத் தெரியாதா! கையில் துணி என்னமோ இருந்தது. ஆனால் கவனமெல்லாம் ஆத்துக்காரர் மீது. ஸரஸா, என்னை ஏமாற்றப் பார்க்கிறயே' என்றாள் ஸரஸாவின் மன்னி.

'அக்கா, அக்கா, அத்திம்பேர் என்ன சொன்னார்' என்று கேட்டுக் கொண்டே மணி ஓடி வந்தான். ஸரஸாவிற்கு வெட்கம் ஒரு புறம் துக்கம் ஒரு புறம். 'ஆமாம். போங்கள் உங்கள் இருவருக்கும் வேறென்ன வேலை. எங்கண்ணா உங்காத்துக்கு வந்து விட்டு திரும்பும்போது நீ அப்படி மாடியிலிருந்து பார்த்தயோ என்னமோ,' என்று சற்று கோபமாகச் சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

பிறகு தொடர்ந்து பண்டிகைகள் வந்தன. மாப்பிள்ளை தூர தேசத்திலிருந்தபடியால் எதற்கும் வர முடியவில்லை. அது விஷயம் அனைவருக்கும் வருத்தம் தான். ஸரஸாவின் சிநேகிதி ஸரோஜாவிற்கும் விவாஹமான வருஷம். கணவன் உள்ளூரிலிருப்பவன். அவர்கள் வீட்டில் பண்டிகைகள் எல்லாம் நடந்தன. ஸரஸாவிற்கு தன் நாதன் மட்டும் வருவதற்கில்லையே என்றிருக்கும்.

ஸரஸாவிற்கு தவறாமல் கிருஷ்ணன் கடிதமெழுதிக் கொண்டிருந்தான். வீட்டில் ஒரு அத்தை பாட்டி இருந்தாள். அவளுக்குத் தெரியாமல் கடிதத்தை தபால்காரனிடமிருந்து ஸரஸா வாங்கிக் கொள்வாள். தெரிந்தால் கிழவி கேலி செய்வாள். தபால்காரனை காத வழியில் கண்டவுடனே அவள் மனம் பதறும். துள்ளி ஓடி கேட்டிற்கு போய் அதை பெற்றுக் கொள்வாள். தபால்காரனுக்கு அவ்வப்பொழுது இனாம் அகப்படும். கடிதத்தை புடவையால் மறைத்துக் கொண்டு மாடிக்குப் போய் அறையை தாளிட்டுக் கொண்டு படிப்பாள். அதற்குள் தம்பி மணி வந்து, 'அக்கா கதவைத் திறவேன். அத்திம்பேர் என்ன எழுதியிருக்கார்' என்று இடிப்பான். 'போடா தடியா, சும்மா இரு. இல்லாவிட்டால் அடிப்பேன்' என்பாள். அவன் மேலும், 'நீ திறக்கா விட்டால் நான் எல்லோரிடமும் போய் சொல்லி விடுவேன்,' என்று பயமுறுத்துவான். அவன் மீது கோபம், கோபமாய் வரும். அதை அடக்கிக் கொண்டு, 'என் கண்ணோல்லியோ போடா. அப்புறம் உனக்கு சாக்லேட் வாங்கித் தருகிறேன்' என்பாள். மணியோ 'ஆமாம் நீ வெருமனே இப்படிததான் சொல்லுவே. அப்பரம் ஏமாற்றி விடுவாய்,' என்பான். 'இல்லை. நிச்சயமாய் தரேண்டா, கண்ணு.' என்று ஸரஸா அவனை சமாதானப் படுத்துவாள். ஸரி நாலு, ஐஞ்சு, ஆறு சாக்லேட் வாங்கித்தரயா? என்பான். அவள் ஆகட்டும் என்று சொன்னதும் அவன் ஓடி விடுவான். அவள் மன்னி வந்து. 'ஸரஸா, எங்களை மறந்து விடாதே" என்று கேலி செய்வாள். ஸரஸாவிற்கு அவள் மீது ஒரே எரிச்சலாக வரும்.

இப்படியே ஐந்து மாதங்கள் கடந்து தீபாவளி வரும் நாளும் நெருங்கிற்று. மறுநாள் தீபாவளி. அதற்கு முதல் நாள் சாயங்காலம் ஸரஸா கிருஷ்ணனை எதிர்பார்த்தவாறு காலத்தை எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள்.

* * *

இது இவ்வாறிருக்க கல்கத்தாவில் ரயிலேறிய கிருஷ்ணன் ஸரஸாவை எப்பொழுது காண்போம் என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

ரயிலில் கூட வந்த வயோதிகர் ஒருவர், ஏனப்ப இதோ பார் உன் பெயர் என்ன? எங்கே போகிறாய் என்று கேட்டார். உலகத்தையே மறந்து இருந்த கிருஷ்ணனுக்கு அவர் கேட்டது காதில் விழவே இல்லை. கிழவர் விடாமல் மறுபடியும் கேட்டார். அதற்கும் பதில் இல்லை மேலும் கிழவர் விடவில்லை. அவன் பட்டணம் போகிறான் என்று அறிந்ததும் 'என்ன தலை தீபாவளியோ? வேட்டாத்துக்குப் போகிறாப் போலேயோ? என்றார். ஆமாம் என்று ஆத்திரத்துடன் சொன்னான். கிழவர் லேசா? அவரோ விடும் வழியைக்காணோம். மென்மேலும் மாமனார் யார்? எந்த ஊர்? என்ன வேலை? என்று கேட்க ஆரம்பித்தார். எல்லாவற்றிற்கும் பதில் ஒரு விதமாய் சொல்லிவிட்டு பேபரை எடுத்து வைத்துக் கொண்டு அதில் ரொம்ப சிரத்தை கொண்டவன் போல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் கண்முன் ஸரஸாவின் உருவம் தென்பட்டதேயன்றி அவ்வச்சு எழுத்துக்கள் புலப்படவில்லை. கிழவர் மறுபடியும் அதென்ன பேபரா என்ன ஸார் யுத்தம் எப்படி? என்று கேட்கலானார். அவனுக்கு கோபமாய் பொங்கிற்று, எல்லாம் அப்படித்தான் இருக்கிறது. புதிதாய் ஒன்றும் விசேஷமில்லை. என்றான்.

கிழவர் மேலும் பேச வாயெடுத்தார். அதற்குள் வண்டி ஒரு ஸ்டேஷனில் நிற்கவே பெரியவர் போய்விட்டு வரேனப்பா கியாபகம் வைத்துக் கொள் என்று சொல்லிவிட்டு இறங்கினார். 'அப்பாடா' என்று கிருஷ்ணன் பெருமூச்சு விட்டான்.

வண்டியும் சென்னையை நெருங்கிற்று. கிருஷ்ணன் இறங்குவதற்கு ஆயத்தமானான். ஸ்டேஷன் வந்ததும் வெளியே எட்டிப் பார்த்தான். மைத்துனனைப் பார்த்து அவன் ஒண்டியாய் இருப்பதைக் கவனித்து சற்று ஏமாற்றமடைந்தான். அவன் சரஸா வந்திருப்பாள் என்று நினைத்தான் இறங்கினதும் இருவரும் க்ஷேமம் விசாரித்துக் கொண்டனர். கிருஷ்ணனுக்கோ ஸரஸா எப்படி இருக்கிறாள் என்று கேட்கவேண்டுமென்று மனம் துடிதுடித்தது. ஆனால் வெட்கத்தால் பேசாமலிருந்தான். இதற்குள் அவன் மைத்துனனே ஸரஸா உன்னை ரொம்ப ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள், என்றான். இருவரும் காரில் ஏறிக்கொண்டு வீட்டிற்குச் சென்றனர்.

வீட்டில் ஸரஸாவை அவள் மன்னி இன்னும் ஒரு "மணி காலம் தான் ஸரஸா, இன்னும் அரை மணி கால் மணி என்று கேலி செய்து கொண்டே இருந்தாள் கடைசியில் மணியும் ஆறடித்தது. கார் ஹாரன் சப்தம் கேட்டவுடனே ஸரஸா ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினாள் மெதுவாக வாசற்பக்கத்து உள்ளிலிருந்து கிருஷ்ணன் காரிலிருந்து இறங்குவதைப் பார்த்தாள்: இதற்குள் யாராவது தன்னை பார்த்து விடப் போகிறார்களோ என்று போய் விட்டாள்.

ஸரஸாவின் மனமோ எப்போ கிருஷ்ணனுடன் பேசுவோம் என்று துடித்துக் கொண்டிருந்தது. கிருஷ்ணனுடைய ஆவலுக்கோ அளவேயில்லை. ஆனால் வீட்டிலோ கும்பல். ஸரஸா மாமியார், நாத்தனார், ஓர்டி எல்லோரும் வந்திருந்தார்கள். இவ்வளவுபேர் இருக்கையில் எப்படிப் பேசுவது?

சாம்பசிவய்யர்வீட்டில் பெரிய தோட்டம். அவரே மிகுந்த சிரத்தையுடன் கவனித்து வருவார். சகலவித பூச்செடிகளும் நிறைந்திருக்கும். தோட்டத்தில் அங்குமிங்கும் உல்லாசமாய் உட்கார்ந்து பொழுது போக்குவதற்காக ஸலவைக் கற்கள் போடப்பட்டிருக்கும். அந்தநந்தவனத்தை எல்லாவற்றையும் விட அதிகமாக சோபிக்கச் செய்யும் விருக்ஷம் ஒரு சண்பக மரம். அது தோட்டத்தில் ஒரு ஒதுக்குப் புறமாய் இருக்கும். அதன் அடியில் ஒரு ஸலவைக் கல் உண்டு. சுற்றிலும் ஒரே அடர்த்தியாய் மல்லிகைக்கொடிகள். அவ்விருக்ஷத்தினிடையில் உட்கார்ந்திருந்தால் யாருக்கும் புலப்படாது. இவ்வழகிய இடம் கல்யாணம் ஆன பிறகு மாமனார் வீட்டிற்கு வந்திருந்த கிருஷ்ணனுடைய பார்வையில் விழ நேர்ந்தது. அவனை அத்தோற்றம் வசீகரித்தது. அவனையறியாமல் அவன் கண் முன் இன்பக் காட்சிகள் தோன்றின.

ரயில் பிரயாணத்தால் களைத்துப்போயிருந்தான் கிருஷ்ணன். ஸரஸாவை எப்படி சந்திக்கலாம் என்று யோசனை செய்ய ஆரம்பித்தான். அவனுக்கு ஜாதி வழக்கங்களின் மீது வெறுப்பு தோன்றியது. "இதென்ன முட்டாள்தனம். கணவன் மனைவியை ஏன் சந்திக்கக் கூடாது? நம்மவர் வழக்கங்களே இப்படித்தான். மேல் நாட்டார் இவ்விஷயத்தில் 'அதிக புத்திசாலிகள்" என்று முணுமுணுத்தான்.

எல்லோரும் சாப்பிடப்போயினர். கிருஷ்ணன் தனிமையாயிருக்க விரும்பினான். தனக்குத் தலைவலி என்றும் சாதம் வேண்டாம் என்றும சொன்னான். மாப்பிள்ளை தலைவலி என்று சொன்னதும், மாமனார் மைத்துனன் எல்லோருமாய் ஆஸ்பிரின் மாத்திரைகளைக் கொண்டு உபசரித்தனர். 'மாப்பிள்ளை ரயிலில் வந்த அலுப்புதான் இருக்கும் கொஞ்சம் காபி சாப்பிடுகிறீர்களா? என்றார் மாமனார், கிருஷ்ணனுக்கு இவர்களது உபசாரம் அவன் வேதனையை அதிகப்படுத்திற்று. நிஜமாய் தலைவலி இருந்தால்தானே? ஆஸ்பிரின் குணம் செய்யும். சட்டென்று அவன் மனதில் ஒரு யோசனை தோன்றிற்று. தான் சற்று வெளியே போய் உலாவி வந்தால் தலைவலி போய் விடுமென்று சொன்னான். அதற்கு அவன் மைத்துனன்கூட துணையாகப் புறப்பட்டான். இதேதடா! இவர்கள் என்னை விடமாட்டார்கள் போலிருக்கே! என்று நினைத்தான். இல்லை, உங்களுக்கு எதற்கு சிரமம். எனக்கு தனியாய் பேசாமல் சற்று நல்ல காற்றில் போய் வந்தால் தலைவலி போய் விடும் என்றான். மைத்துனனை எவ்வளவோ கஷ்டப்பட்டு தன்னுடன் வராமலிருக்க தடுத்து விட்டு வெளியே போகக் கிளம்பினான். மணியைக் கூப்பிட்டு மணி, நான் சண்பக மரத்தடியில் சற்று நேரம் கழித்து விட்டு வருகிறேன். இந்தா உங்கக்காளிடம் சொல்லு, 'என்று கூறிவிட்டு சண்பக மரத்தை நோக்கி நடந்தான். மணி ஓடோடியும் போய் ஸரஸாவிடம் அத்திம்பேர் சண்பக மரத்தடியிற்கு போயிருப்பதைத் தெரிவித்தான். ஸரஸா. கிருஷ்ணனுக்கு தலைவலி என்று கேட்டதும் அதிகக்கவலைகொண்டாள். 'ஐயோ, அவரை எப்படி போய் நான் பார்ப்பேன்,' என்று துடித்துக் கொண்டிருந்தாள். மணி சொன்னது தான் தாமதம். மறு நிமிஷம் ஒரே ஓட்டமாய் சண்பக மரத்தடியை நோக்கி ஓடினாள். ஸாதாரணமாய் இருட்டி விட்டால் ஸரஸா தோட்டத்திற்குப் போக மாட்டாள். அதிலும் அமாவாசை என்றால் அவளுக்கு அதிக பயம். அன்றோ அவளுக்கு எங்கும் ஒளி வீசுவது போலிருந்தது. வழியில் அவள் கால்களில் தைத்த முட்களையும், குத்தின கற்களையும் கூட பொருட்படுத்தாமல் வேகமாய் சண்பக மரத்தை நெருங்கினாள். மறு நிமிஷம் கிருஷ்ணன் கரங்களின் பிடியில் அகப்பட்டுக்கொண்டிருந்தாள். இருவரும் இன்பக் கடலில் மூழ்கினர். சிறிது நேரம் மௌனமாய் இருந்தனர். பிறகு ஸரஸா நிமிர்ந்து பார்த்தாள். தூரத்தில் வேலைக்காரக் குப்பன் வீட்டில் ஒரு விளக்கு மினுக் மினுக் கென்று எரிந்து கொண்டிருந்தது. அந்த காரிருளில் ஒருவர் முகம் ஒருவருக்கு ஒரு நிமிஷம் தெரிந்தது. கண்கள் சந்தித்து பேசிக் கொண்டன. மறு நிமிஷம் காற்றால் அசைக்கப்பட்ட கொடிகளால் அத்தீபம் மறைக்கப்பட்டது. அவ்வப்பொழுது இலைகளின் நடுவில் அது பிரகாசிக்கும் ஸரஸா மெதுவாய், 'தலைவலி ரொம்ப பலமா?' என்று குறும்புத் தனமாய்க் கேட்டாள். 'எல்லாம் உன்னைக் காண்பதற்காகத்தான் இவ்வளவு பாசாங்கு செய்தது' என்றான் கிருஷ்ணன். பிரிந்தவர் கூடினால் பேச்சிற்கு முடிவு உண்டோ! நமக்கு அதற்கு மேல் அவசியமில்லை. அவர்கள் என்ன பேசினார்களோ அச்சண்பக விருக்ஷத்திற்குத் தான் தெரியும். அது அந்த இன்பக் காட்சியை அனுபவித்து கொண்டு, அதை தன் இலைகளிலேயே அடக்கிக் கொண்டது.

உலாவப் போன மாப்பிள்ளை 10 மணியாகியும் திரும்பி வரக் காணோம். மாமனார் கவலை கொண்டார். இதற்குள் கிருஷ்ணன் தகப்பனார், தம்பி முதலியவர்கள் ரயிலில் வந்த களைப்பினால் நித்திரை போயினர். ஸரஸாவைக் காணவில்லை என்று எல்லோரும் குசு குசுவென்று பேசிக் கொண்டனர். ஸரஸாவின் மன்னிக்கு சந்தேகம் தட்டியது. உடனே தூங்கிக்கொண்டிருந்த மணியை எழுப்பி, 'மணி, மணி அக்கா எங்கே?' என்றாள். மணி புத்திசாலி. எந்த ரகசியத்தையும் வெளியிடமாட்டான். எனக்குத் தெரியாது மன்னி! என்று மழுப்பிவிட்டான். அவனிடமிருந்து ஒன்றும் அறிய முடியாமல் போகவே அவள் வீடு முழுவதும் தேடிவிட்டு மெதுவாய் தோட்டத்தில் சென்றாள். தூரத்தில் சண்பக மரத்தடியில் இரு உருவங்கள் தென்பட்டன. மெதுவாக வளை, சங்கிலிகள் இவைகள் அசையாமல் செடிகளை விலக்கிக் கொண்டு அருகில் சென்று மறைந்து பார்த்தாள். அமாவாசை இருட்டாகையால் ஒன்றும் புலப்படவில்லை. இதற்குள் குப்பன் ஸரஸாவின் அன்னையிடம் ஸரஸாவின் இருப்பிடத்தை உரைத்தான். கூடத்து கடியாரம் பன்னிரண்டு அடித்தது. அருகிலிருந்த மாதா கோவில் மணியடிப்பது கேட்டு கிருஷ்ணனும் ஸரஸாவும் தாங்கள் அதிக நேரமாய் அங்கு இருப்பதை அப்பொழுதுதான் உணர்ந்தனர். இருவருக்கும், 'ஐயோ, வீட்டில் நம்மைத்தேடியிருப்பார்களே" என்று தோன்றிற்று. பிறகு இருவரும் மறுநாள் அவ்விடத்திலேயே சந்திக்கலாம் என்று பேசிக்கொண்டு வீட்டிற்குள் சென்றனர்.

இரண்டு வருஷங்கள் கடந்து விட்டன. தீபாவளி. சென்னையிலல்ல. கல்கத்தாவில். சௌபாக்யவதி ஸரஸாவின் இல்லத்தில் பூஜை உள்ளில் கிருஷ்ணன், ஸ்வாமி பூஜையில் ஈடுபட்டிருக்கிறான். ஸரஸா தங்க விக்ரஹம் போன்ற ஒரு ஆண் குழந்தையை கையில் வைத்துக் கொண்டு பரி பூரண திருப்தியுடன் அவன் பின்னால் நிற்கிறாள். கற்பூர ஆரத்தி ஆனவுடன் இருவரும் நமஸ்காரம் செய்கின்றனர். குழந்தை, "அம்மா, அப்பா, இம்மாச்சி" என்று தன் மழலை சொற்களால சொல்லுகிறது. வெளியில் பட்டாஸ் வெடிக்கும் சப்தம். கிருஷ்ணனுக்கும் ஸரஸாவிற்கும் தலை. தீபாவளியின் காட்சிகள் கண்முன் தோன்றுகிறது. இருவரும் ஒருவரை யொருவர் பார்க்கின்றனர். அவ்வளவு தான். அதற்குமேல் அவர்கள் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினர்.

"அம்மா போஸ்ட், என்று தபால்காரன் ஒரு பார்ஸலை கொண்டு ஸரஸாவிடம் கொடுக்கிறான். ஸரஸா தந்தையிடமிருந்து வந்த அந்த பார்ஸலை ஆவலுடன் திறந்துபார்க்கிறாள். அவளுக்கு புடவையும், கிருஷ்ணனுக்கு வேஷ்டியும் அப்பா அனுப்பி இருக்கிறார். அதில் அவள் மன்னி அண்ணா இவர்களிடமிருந்து ஒரு கவர் இருந்தது. அதைப் பிரித்தவுடன் அதில் சற்றே வாடின சண்பகப் பூ இதழ்கள் பல பலவென்று உதிர்ந்தன.

விக்டோரியா டிபோ. மைலாப்பூர், மதராஸ்.
ஷாப்புகளில் கிடைக்கும்.

ரூ. 10,000 மதிப்புள்ள கடியாரங்கள் இலவசம்

எமது உண்மையான மருந்து "ஜோஹர் - இ - ஹசன்" அனாவசியமான ரோமத்தை விலக்கிவிடும். அதன் உபயோகத்தால் ஆயுள் பூராவும் ரோமம் வளராது. சருமம் மிருதுவாகவும், அழகாகவும், பட்டுப் போன்றும் இருக்கும். விலை பாட்டில் ரூ. 1/15. மூன்று பாட்டில் ரூ. 5/-
இந்த ஆயிலை பிரபலப்படுத்துவதற்கு அழகிய மியூட் கைகடியாரம், ஒரு தோலா லண்டன் நியூ கோல்ட், ஒவ்வொரு புட்டியுடன் இலவசமாகக் கொடுக்கப்படும். 3 பாட்டில்கள் சேர்ந்தாற்போல் வாங்கினால் நான்கு கைகடியாரம், 4 தோலா லண்டன் நியூ கோல்ட் தபால் சார்ஜ் இலவசமாகவும் கொடுக்கப்படும். கடியாரம் அழுத்தமாகவும், அழகாகவுமிருக்கும். 10 வருஷ உத்திரவாதம் அளிக்கப்படும்.
குறிப்பு:—சாமான் திருப்தியில்லாவிடில் பூரா விலை வாபஸ்.
LONDON COMMERCIAL Co.,
P. B. 165, (S. M. M.) LAHORE (India)
(EAB)

அம்மா-நான் செத்து விடுவேனென்று நீங்கள் எல்லாம்-நினைத்துவிட்டீர்களல்லவா?
இல்லை கண்ணே! ஜம்மியின் லிவர்க்யூரைப்பற்றி தெரியாத சிலரே நினைத்தனர்.
ஜம்மியின் லிவர்க்யூர்
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி முதலிய நோய்களை அபரிமிதமாய் குணப்படுத்தும்.
எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன.
ஜம்மி வெங்கிடரமணய்யா அண்டு சன்ஸ்—மைலாபூர், மதராஸ்.
சப் ஆபீஸ்:—கும்பகோணம். (S.I.R.)
பிராஞ்சுகள்:—பம்பாய், கல்கத்தா, லக்னௌ, திருச்சினாப்பள்ளி, பெங்களூர், விஜயநகரம்.

நவ ஹிரண்யன்

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

★

ஹிரண்யன்:—

ஹா! என் பெருமைக் கிடில்லை! எனது அரண்மனைப் பூங்காவனம் என்ன காக்ஷியாயிருக்கிறது. மலர்கள் நாற்புறமும் சிதறுண்டிருக்கின்றன. அருகே ஆடி மாஸத்து பிரவாகத்தினுல் ஓடிக்கொண்டிருக்கும்சிற்ருற்றிக்குத் தான் என்ன வேகம்! என்ன உற்சாகம்! இன்னும் ஸூர்யன் அஸ்தமிக்கவில்லை. அவன் பொற் கிரணம் நதியின் மேல் படுவதால் இரு கரையும் தங்கமயமாகப் பிரகாசிக்கிறது. ஹா! என்ன சப்தம்! என்ன அந்தரகீதம்! என் காதலி லீலாவதி கானம் செய்து கொண்டிருக்கிருள்...

லீலாவதி:—பாடுகிருள்.

"வெற்றி செயலுக்குண்டு
விதியிநியம மென்று
கற்றுத் தெளிந்த பின்னும்
-கிளியே!
கவலைப்படலாகுமோ.

ஹிரண்யன்:— துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்.
அன்பிலழியுமடி—லீலா.
அன்புக்கழிவில்லை காண்.

லீலா:—இது எத்தனை அழகியநாடு. இதன் குறுக்கிலும், நெடுக்கிலும், வயல்களும், ஆறுகளும், நதிகளும் புஷ்பங்களிலுள்ள சுகந்தமும், இன்னிசையும் ஒன்ருேடொன்று இணைக்கப்பட்டு தழுவி ஸ்வர்க்க போகத்தை அடைந்திருக்கின்றன. கடவுள் நமக்கு இந்த அழகிய பொருளைக் கொடுத்திருக்கிருர். ஆனுல் அதைக் காக்கும் சக்தியை அளிக்கவில்லை.

ஹிரண்யன்:—(கோபத்தோடு) என்ன சொன்னுய்?

லீலா:—இல்லை:-அன்பரே! நமது இத்தனை ஸௌக்யத்தைப் பார்க்க கடவுளுக்குப் பொறுக்கவில்லை போலும்! அநேகமாக எல்லாருமே அதிக சுகத்திலாழ்ந்திருப்பது கடவுள் சம்மதமாகாது.

ஹிரண்யன்—லீலா! பூமாதேவி இயற்கைத் தெய்வம் தன் குழந்தைகளை எல்லையற்ற அன்போடு தோற்றுவித்து அதிகப் பிரியத்தினுலேயே அவர்களை அழித்தும் விடுகிருள்.

லீலா:—அப்படியானுல் என்னையும் தாங்கள் அதிகமான அன்பினுல் அழித்து விடுவீர்களோ?

ஹிர:—இல்லை. அவ்விதம் உன்னிடம் நான் அஸாதாரண அன்பு செலுத்தவில்லை.

லீலா:—பாருங்கள் பிராணபதி! நமது குழந்தை அதோ அந்த முல்லைச் செடியருகில் உட்கார்ந்திருக்கிருன். அந்த முல்லை தான் அதிக மலர்ச்சியோடிருக்கிறதா? அல்லது அவன் முகந்தான் புது மலர்ச்சியாயிருக்கிறதா. என்று அறிவது கஷ்டம்? என்ன அழகு!

ஹிர:-நிஜந்தான் கண்ணே.

(பிரகலாதன் பாடிக் கொண்டிருக்கிருன்)

ராகம் தன்யாசி.

பல்லவி

எத்தனை கோடி
இன்பம் வைத்தாய்
எங்கள் இறைவா,
இறைவா! இறைவா!

அநுபல்லவி

சித்தினை யசித்துடன்
இணைத்தாய் அங்கு
சேருமைம்பூதத்தின்
வியனுல கமைத்தாய்
அத்தனை யுலகமும்
வர்ணக் களஞ்சிய
மாகப் பல பல நல்
அழகுகள் சமைத்தாய் (எ)

சரணம்

முக்தியென்ருெரு நிலை
வகுத்தாய் அதில்
முழுதினையுமுணரு
முணர் வமைத்தாய்
பக்தி யென்ருெரு நிலை
படைத்தாய் எங்கள்
பரமா, பரமா,
பரமா, ஓ (எ)

ஹி:—லீலா! என்ன திரும்பவும் பழைய புத்தி விலகவில்லை. பிரஹலாதா!

பிர:—தந்தாய். வந்தனம்.

ஹிர:—என் மைந்தா! உன் கொள்கையை மாற்றிக் கொண்டனையா? கண்ணனைப்பற்றிய எண்ணம் அகன்றதா? நமது குலப் பெருமையை யுணர்ந்து அதற்கிசைய நடந்து கொள்வாயென நினைக்கிறேன்.

பிர:—எந்தாய்! யானுய்யும் வழி யுணர்ந்தேன். நீசவாழ்வை விரும்பேன். அற்ப மாயையில் சிக்கி ஆழ்ந்த பொருளை விரும்பாமல் காலம் கழியேன்.

ஹிர:—சேவகர்கள் இந்தப் புத்தி யறவனை சிறைப் பள்ளிக்கூடத்திற்கு இட்டுச் செல்லுங்கள். சிறிது காலம் பொறுத்துப் பார்ப்போம். காலம் இவனைத் திருத்தலாம்.

சுக்கிராசாரி:—
நாட்டில்
புகழ் படைத்தான்
நல்லோன்
ஹிரண்யன்—

பிர:—மூட்டைப் பாபம் சுமக்கின்ருள் முந்தைய வினைகளினுல்

சுக்கிரன்:—இரணியாய
நமோவென்று
இசை யிடினுல்
மரண பயமின்றி
மான்புறலாமே

பிர:—நாராயணுவென்ற நர்மம் நவின்ருல் தீரா வினை யகலும். தீரம் பிறக்கும்.

சுக்:—மன்னன் இரணியன் மகிமைகளைப் புகழ இன்னல் விலகும் ஏற்றம் பிறக்கும்.

பிர:—குருமூர்த்தி! தங்களுக்குத் தெரியாத விஷயமில்லை. தாம் எண்ணறக் கற்று எழுத்தறிவுணர்ந்தாலும், ஓர் அரசனைப் புகழ்கிறீரே! ஓர் இழி குணமுடைய தற்புகழ்ச்சி யுடைய ராக்ஷஸ குணமுடையோனைப் புகழ்ந்தால் இகத்திற்கும், பரத்திற்கும், ஏற்ற முண்டா? அரசனுக்கு ஆத்மாவை யடிமையென்கிறீரே!

சுக்கிரன்:—மைந்தா பிரகலாதா! அசுர நிதி தெரியாமல் பேசுகிருய். பகைவனிடம் அன்பு செலுத்தி பெற்ற தகப்பனைப் பகைக்கிருய்.

பிர:—ஆசிரியரே! நான் எனக்கென ஒரு நியாயம் உண்டென்று கருதவில்லை. கடமையென்று கருதவுமில்லை. பொதுவான நியமப்படி இந்த உலகத்தை ஆக்கியும், அழித்தும், காத்து வரும் மஹா சக்தியை, பரம் பொருளை வணங்குவது யாருக்கும் கடமையாகும். முற்றுமுணர்ந்த தாங்கள் நாஸ்திக வாதம் பேசுவது முறையன்று.

சுக்:— (தனக்குள்) பையன் ஞானத்தில் முதிர்ந்து பக்குவமடைந்து விட்டான். இனி இவனை ஹிரணியனுலும் ஒன்றும் செய்யமுடியாது. வாதத்தினுல் இவனை வெல்வதரிது. தம்பீ! உன் தந்தை நம்மைப் பார்க்க விரும்புவதாக வேலையாள் வந்து சொன்னுன். செல்வோம் வா.

பிர:—சரி, குருநாதா!

ஹிர:-பாலா, பிரஹலாதா! வா. உட்கார் மனதை. மாசுறுத்தும் மாற்ருனை மறந்தாயா? அந்த தீயவனிடம் உனக்கேற்பட்ட பிரமை விலகிற்ரு?

பிர:—தந்தையே! நானெனும் அகந்தை அகற்றினேன். உலகத்தில் பெரிய கடவுள் பிறப்பற்றவன்-கலங்களாலும் செய்கைப் பயன்களாலும் விருப்பங்களாலும தீண்டப்படாததொரு விசேஷ புருஷன் ஈசுவரன்.

ஹிர:-சரி. உன்னுேடு வாது புரிவதில் பயனில்லை. இன்று முதல் நீ எனது சத்ரு.
உன்னைக் கொன்ருலினி
என்ன செய்வாய்?

பிர:—ஓம் நமோ நாராயணுய. ஓம் நமோ நாராயணுய.

ஹிர:—உன்னது மலை முடி மீதினிலிருந்து உருட்டிடுவேன் உன்னை.

பிர:-ஓம் நமோ நாராயணுய.
ஓம் நமோ நாராயணுய.

ஹிர:-நடுப் பனிக் கடலில் திமிங்கில வாய்க்குள் நான் கொண்டு திணித்திடுவேன்.

பிர:-ஓம் நமோ நாராயணுய.
ஓம் நமோ நாராயணுய.

ஹிர:-இடிப்பினை யொடிப்பேன்.
இங்குன்னை நான் தின்பேன்.

பிர:-ஓம் நமோ நாராயணுய.
ஓம் நமோ நாராயணுய.

ஹிர:—நாட்டினிலெங்கும் பகுதி மார்க்கத்தை நாட்டினுய்—பகைமூட்டினுய்—வாட்டியுனை மடக்கிச் சிறைக்குள்ளே மாட்டுவேன் வலி கூட்டுவேன்.

பிர:—கண்ணன் எம்பெருமானருள் வாழ்கென்று வாழ்த்துவேன் — முடி தாழ்த்துவேன்—அண்ணல் எம்பெருமானருள் அன்பினுல் அப்பனே துயர் நீங்குவேன்.

ஹிர:—கூட்டங்கூடி நாராயணுவென்று கோஷித்தாய், எனைத் தூஷித்தாய், வாட்டமின்றிப் பகைவனை யன்புடன் வாழ்த்தினுய். எனை தாழ்த்தினுய்.

பிர:—தர்ம ஸ்வரூபத்தைத் தாழ்ந்து வணங்கினுல் தீபமேன்? மனஸ்தாபமேன்?
கர்மவினை தீர்க்கும் கடவுளைப் பணிந்தால் காலனும் கண்டு அஞ்சுவான்.

லீலா:—நாதா என்ன இது? தங்கள் அரிய விஞ்ஞான சக்தியை—நாராயணனிடத்துள்ள த்வேஷத்தினுல் அஞ்ஞானமாக மாறும்படி செய்கிறீர்கள். அந்த அஞ்ஞானத்தினுல் நாம் தெய்வீக வாழ்க்கையினின்று பிரிந்து படுகுழியில் விழும்படி செய்கிறீர்கள். ஸர்வ ஜீவராசிகளும் மரணமடைகின்றன. பொறுமையினுல் இத்தனை தீர சூரரான தங்களுக்கும் இழிவு தான் ஏற்படும். நல்ல செய்கை தான் கடைசியில் ஜயம் பெறும். மரணம் உயிரை அழிக்க முடியாது. ஒரு தடவை ஒரு தப்பான காரியம் செய்தாலும், அல்லது ஒருவருக்குச் சிறு தீங்கிழைத்தோமானுலும் அவர்களைப் பார்க்குந்தோறும், அல்லது நினைக்குந்தோறும், மனம் நிம்மதியற்று பரபரப்படையும். நாதா! நல்ல செய்கையால் தீய செயலை நாசமாக்கலாம்.

ஹிர:—தேவி! எனக்கு மனம் குழம்புகிறது. புத்தி மாருட்டம் ஏற்படும்போல் தோன்றுகிறது. மயக்கமுண்டாகிறது.

லீலா:—நாதா! என்ன இது! சற்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்.

பிர:—எந்தாய்! இரக்கத்தினுல் மிஞ்சி தங்கள் கண்கள்

எதிரி சப்மரீன்களைச் சமாப்தி செய்ய



எதிரி சப்மரீன்களைச் சமாப்தி செய்யக் கூடிய பீரங்கிகள்! இவை அமெரிக்காவின் 'சுதந்திரக் கப்பல்''களில் வைக்கப் பட்டிருக்கின்றன. இதல் யுத்த தளவாடங்களும் போகின்றன.

கண்டு பிடித்தவர்கள் இவர்கள்தான்!

★

சென்ற வாரம் 17ம் பக்கத்தில் 'முதலில் கண்டுபிடித்தவர் யார்?' என்ற மகுடத்தில் 'டைப்ரைட்டர், தையல் மெஷின், ஸப்மரீன், டிராம், டெலிபோன் ஆகியவைபற்றி சில கேள்விகள் வெளிவந்திருந்தனவல்லவா? அவற்றைக் கண்டுபிடித்த பிரமுகர்கள் இவர்கள்தான்!

'டைப்ரைட்டர்'

டைப்படிக்கும் யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு இப்பொழுது சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்குமேலாகிவிட்டன. முதன் முதலில் 1714ம் வருஷம் ஜனவரி மாதம் 7-ந் தேதி இந்த யந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. கண்டுபிடித்தவர் ஐரோப்பியர் அவர் பெயர் 'ஹென்ரி மில்.'

தையல் மெஷின்

இப்போது ஆடைகளைச் சுலபமாகத் தைத்துக் கொடுக்கும் இவ்வியந்திரம் தலைப்பட்டு சுமார் 173 வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. சார்லஸ் வெர்ஸன்தால் என்ற மேனாட்டுப் பிரமுகர் இதை 1770ம் ஆண்டில் முதன் முதலாகக் கண்டு பிடித்தார்.

ஸப்மரீன்

கடல் நீரில் மூழ்கியிருந்து எதிரிக் கப்பல்களை டார்பிடோ செய்து துவம்ஸமாக்கும் இந்த 'கடல் மூழ்கி' கண்டுபிடிக்கப்பட்டுஇப்போது 3 நூற்றாண்டுகளுக்குமேலாகிவிட்டது! கார்னிலியஸ் வான்டிரெபெல் என்பவர் இதைக் கண்டுபிடித்தார்,

டிராம்

டிராம் பாதை முதன் முதலில் பாரிஸில் தான் போடப்பட்டது. இங்கு 1855-ம் வருஷம் இந்த சாதனம் ஏற்பட்டது. முதன் முதலில் டிராம் பாதையைப் போட்டு அதை விட்டுக் காட்டியவர் லூபாட் என்பவர்.

டெலிபோன்

இந்த நவீன சாதனம் ஏற்பட்டு இப்பொழுது 129 வருஷங்களாகி விட்டன. டாஸ்கிரே என்ற ஐரோப்பியர் தான் இதைக் கண்டுபிடித்தார்!

நீர் மல்கிவிட்டன. விழிகளில் சோகம் ததும்புகிறது.

இர:—(மறுபடியும் திடம் கொண்டு) ஹே! மைந்தா! என்ன தான் நீங்கள் என் மூளையைக் குழப்பினாலும் அந்த ஹரியிடத்துள்ள த்வேஷம் மாறாது. அடக்கிப் பார்த்தேன். அடங்கவில்லை. மாற்றானை என்ன துணிவுடன் நீங்கள் இருவரும் என் எதிரில் புகழ்கிறீர்கள்? சரி. நீ வானளாவப் புகழும் ஹரி இப்போது எங்கு இருக்கிறான் சொல்லடா?

பிர:—தந்தாய்! நாராயணன் இங்குள்ள ஸர்வ ஜீவராசிகளிடத்திலுமுள்ளான். இந்தத் தூணிலுள்ளான். துரும்பிலுள்ளான்.

ஹிர:—
கம்பத்திலுள்ளானோ—
அடே காட்டுன்றன்
கடவுளைத் தூணிடத்தே—
வம்புரை செயுமூடா—
வீணில் வாதுசெய்வதி
லேதும் பயனுண்டோ?

பிர:—
வல்ல பெருங் கடவுளிலா
அணுவொன்றில்லை
மஹா சக்தியில்லாத
இடமொன்றில்லை
அல்லலில்லை அல்லலில்லை.
அல்லலில்லை
அனைத்துமே தெய்வ
மென்றாலல்லலுண்டோ!

ஹிர:—மகனே என் ஆவல் மிஞ்சிவிட்டது. நீ துதிக்கும் நாராயணனைக் காட்டு. அவனை அப்படியே ஹதம் செய்துவிடுகிறேன்.

பிர:—
"ஒளி படைத்த
கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட
நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த
மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட
தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற
மதியினால் வா வா வா
சிறுமை கண்டு
பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு
இறங்குவாய் வா வா வா
ஏறுபோல்
நடையினால் வா வா வா.

பல்லவி ராகம் அடாணா

சிங்கம்:
மகனே மனக்கவலை திராதா
மாந்தருக்குள்ளே சாந்தகுண
சீல—(ம)

அநுபல்லவி

அகமகிழ்ந்தேன்—உன் அன்
பின் மிகுதியால் மிக விரை
ந்து வந்தேன் பாரிதோ—(ம)

சரணம்

தந்தையினிதுர தன்னலம்
கெடினும் தான் மனம்
வாடாமல்.
எந்தவிதமான இன்னல் வந்
துற்றாலும் ஏக்கமடையாமல்
சந்ததமும் எனைச் சலியா
வுள்ளத்தோடு சார்ந்திருக்கும்
உன்னை (ம)
இந்த க்ஷணத்தில்
காக்க வந்தேன்
இரணியன்
முன்னாலே.
சிந்தை கலங்காதே
சிறுவா நீயும்
வந்து விட்டேன் பார்
வழி படுமுன் முன்னே
உந்தையும் உன்னால்
உருப்படுவாள் பின்னே
விந்தை யென்று யாரும்
வியப்படைவார் இன்னே
(மகனே)

லீலாவதி:—(சிங்கத்தின் முன்) (அகவல்)

அப்பனே போற்றி அறங்காப்பாய் தாள் போற்றி—வெம்மையுடைய விதிப் பயனால் கணவன் மும்மைப் பிணியறுக்கும் முதல்வனை அறியாமல்—அகங்காரம் அகத்தை அறமின்றிப் பாழாக்க—மகனைப் பழித்து - மாற்றானென்றுனை யெண்ணி. உன்னைப் பணிந்து உய்யும் வழியுணராமல் தன்னையும் கெடுத்து, சார்ந்தோரையும் பழித்து, நல்லானென்றுலகோர் நவின்றிட வழியின்றி பொல்லான் என்றே யாரும் புகலும் வண்ணம் ஆகி, துன்புறுங் கணவனை, துயரத்தினும், இன்பமுறும் வண்ணம், இயல்விப்பாய்.

ஹிரண்யன்:—லீலாவதி! இப்பொழுதுணர்ந்தேன். மாற்றானயினும் உள்ளன்போடு போற்றினால் உற்ற நண்பன் ஆகிவிடுவானென்றுணர்ந்தேன். சத்ருவையும், மித்ரனையும் ஸமநோக்குடன் பார்ப்பதே அறமுணர்ந்தோருக்கழகு என்னும் நீதி இதுவரை எனக்குப் புத்தகப் பாடமாய்த் தானிருந்தது. உனது மனம் இதுவரை என் அகந்தையினால் எனக்குத் தெரியவில்லை. வலிமையும் ஐசுவரியமும் என் கண்களை மூடிவிட்டன! உத்தம பத்னியாகிய உன்னால் என் ஞானக் கண் திறந்தது. நீயே என் சற்குரு. கண்ணனே என் அன்பார்ந்த நண்பன். எனது அருந்தவப் புதல்வன் பிரஹலாதனால் பெறும்பேறு பெற்றேன். அஞ்ஞானவிருளை அகற்றி மெய்ஞ்ஞான முணர்த காரணமாய் வந்தவன். ஆதிப் பரம் பொருள் நாரணனை அன்புடன் வாழ்த்துவோம்.

நரசிங்கம்:
அன்பு செய்வாயா-மகனே
அன்பு செய்வாயா.

மூவரும்:—நாரணனே! அவ்விதமே அன்பு செய்வோம்.

ரிடயர்டு P. W. D. ஓவர்சியர் ம-ா-ா-ஸ்ரீ C. S. சுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய ஷஷ்டியப்தப் பூர்த்தி வைபவம் 4-1-'43ல் வத்தலகுண்டு கோவில் தெருவிலுள்ளது, அன்னார் கிரஹத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டபோது எடுத்தபடம். ஸ்ரீ சுப்பிரமணிய அய்யரும், அவர் தர்மபத்தினி ஸ்ரீமதி அலமேலு அம்மாள் அவர்களும்.

சிறுவர் பகுதி

★

திருந்திய தேவதை!

★

(என். பி. ராஜன்)

உலகத்திலேயே மிக்க அழகுள்ள நந்தவனங்களுக்குப் பெயர் போனது காஷ்மீர தேசம். எங்கு பார்த்தாலும் மேகங்கள் தவழும் மலைத் தொடர்களும், பசும் புல் வளர்ந்த பள்ளத்தாக்குகளும் நிறைந்திருக்கும்.

சில வருஷங்களுக்கு முன்பு ஒரு வசந்த காலத்தில் வனதேவதைகளின் அரசி தன் மகளுடனும், மற்ற பரிவாரங்களுடனும் அத் தேசத்தில் மிகவும் வனப்புள்ள ஒரு பள்ளத்தாக்கில் வந்து தங்கினாள். அந்தப் பருவ கால முழுவதையும் அங்கேயே கழிப்பதற்கான திட்டமும் போடப்பட்டிருந்தது. காலையிலிருந்து மாலை வரையில் தேவதைகளின் பொழுது மிக உற்சாகமாகப் போய்க்கொண்டிருந்தது. நிமிஷத்திற்கொரு விதமானப் புஷ்ப ஆடைகளை அவை அணிந்து கொண்டன. பட்டுப்பூச்சிகளும், பொன்வண்டுகளும் பூட்டிய தேர்களில் அவை பல இடங்களுக்கும் பிரயாணம் செய்தன. புஷ்பங்களிலுள்ள தேனை வயிறார உண்டபின் தெளிந்த நீர் நிறைந்த ஏரிகளில் குதித்து விளையாடின. சிற்சில சமயங்களில் காட்டு வாத்துக்களின் முதுகின் மேல் ஏறிக்கொண்டு அவை நெடுந் தூரம் சென்று திரும்புவது வழக்கம். இன்னும் பூரண சந்திரன் பிரகாசிக்கும் நாளாயிருந்துவிட்டாலோ, அவை இரவு முழுதும் கொட்டமடிக்கும்.

ஒரு நாள் காலை தாமரை இதழ்களின்மேல் உட்கார்ந்து சூரிய கிரணம் மேலேபடச் சோம்பல் முறித்துக் கொண்டிருந்த தேவதைகளின் கண்களில் கரையில் யாரோ நிற்பது தென்பட்டது. யாரென்றறிய ஆவல் கொண்ட எல்லாம் கரை வந்தன. பக்கத்துக் கிராமத்திலுள்ள 'யசோதரா' என்னும் இடைக் குலப் பெண், மேய்ந்து கொண்டிருந்த தன் பசுமாடுகளுக்குக் காவல் புரிந்து கொண்டிருந்தாள். தேவதைகளுக்கு முன்னை விட சந்தோஷம் அதிகமாகப் போய் விட்டது. ஏனெனில் இப்பொழுது தங்களுக்கு குடிப்பதற்குப் பால் கிடைக்குமல்லவா?

தேவதைகளின் அரசகுமாரிக்கு மாத்திரம் யசோதரா தினமும் அங்கு வருவது பிடிக்கவில்லை. அவளுடைய எளிய ஆடையும், அடக்கமான குணமும், சாந்தமான பேச்சும் அரசகுமாரி விரும்புவதாயில்லை. ஆகவே அவள் அங்கு வராமல் தடுப்பதற்காக அரசகுமாரி முள்ளம் பன்றி போலவும், குள்ள நரி போலவும் உருவமெடுத்து அவளை அடிக்கடி பயமுறுத்தி வந்தாள்.

சில நாட்களுக்குப் பின் ஒரு பௌர்ணமியன்று குதிரைகளும், வேட்டை நாய்களும், காவலாட்களும், தாதிகளும் புடைசூழ அந்த ஊர் ராஜ புத்திரி "விலாசினி" நிலாச் சாப்பாட்டிற்காக அதே இடத்திற்கு வந்தாள். மின் மினிப் பூச்சிகளைக் கூப்பிட்டு விலாசினி தங்குமிடத்தை மிகவும் சோபிக்கும்படிக் கட்டளையிட்டாள். தேனீக்களிடம் அவர்களுடைய ஆகாரத்தில் தேனையும், வண்டுகளிடம் அவர்களுடைய ஜடைகளில் மகரந்தப் பொடியையும் கொண்டு வந்து வருஷிக்கச் சொன்னாள். விலாசினி நடக்குமிடங்களிலெல்லாம் மேன்மையானப் பூவிதழ்கள் தூவப்பட்டன. நடுநிசிவரையில் குதூகலமாகப்பொழுது போக்கிய பிறகு விலாசினி தன்னுடைய பல்லக்கில் அரண்மனைக்குத் திரும்பினாள்.

மறு நாட் காலை வழக்கம்போல் யசோதரா தன்னுடைய பசு மாடுகளுடன் வந்தாள். அவளைக் கண்டதும் அரசகுமாரியான தேவதைக்கு வெறுப்பு கொழுந்து விட்டெரிந்தது. "நேற்று நாம் கண்ட பெருமை பொருந்திய ராஜ புத்திரிக்கும், இந்த அற்ப, மாடு மேய்க்கும் பெண்ணிற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது" என்று அவள் எண்ணிப் பார்த்து உடனே ஒரு பெரிய கழுகு உருவமெடுத்து மாடுகளைக் கொத்தி மூலைக் கொன்றாக விரட்டி யசோதராவிற்குத் துன்பம் விளைக்க வாரம்பித்துவிட்டாள்.

இதைக் கண்ட அரசி தன் மகளை யழைத்து, "ஏனிப்படி அந்த எளிய பெண்ணைத் துன்பப்படுத்துகிறாய்?" என்று கேட்க, "கிழிந்த உடைகளணிந்து, நகைகள் ஒன்றுமில்லாமலிருக்கும் இந்தத் தாழ்ந்த ஜாதி பெண்ணிற்கும், நேற்றிரவு வந்த அந்த அழகிய ராஜகுமாரிக்குமுள்ள வித்தியாசத்தை நீயே பாரேன்!", என்ற கர்வம் நிறைந்த பதில் வந்தது.

"ஓஹோ! ஆடம்பரமான வெளித் தோற்றத்தைக் கண்டு நீ மயங்கி விட்டாயா? சரி, அடுத்த பௌர்ணமியன்று நீயே பார்" என்று கூறிச் சென்றாள்.

மறு பௌர்ணமியும் வந்தது. விலாசினியும் அவள் பரிவாரமும் அறுசுவை யுண்டியைத் தங்கத் தட்டுகளில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில் யாரோ இரு பிச்சைக்காரிகள் தா நின்றுகொண்டு "கொஞ்சம் சாப்பாடு கிடைக்குமா?" என்று யாசிப்பதை ராஜகுமாரி பார்த்தாள்.

"இது யாரடி பீடைகள்? இந்த இடத்திற்குக் கூட வந்துவிட்டனர்! அடித்துத் துரத்துங்கள்!" என்று கோபமாய்க் கட்டளையிட்டாள்.

வேலைக்காரர்கள் அவ்விருவரையும் தம் கைகளிலுள்ள நீளக் கம்புகளால் தூரத் தள்ளிச் சென்றனர். ஏற்கனவே அதே நாள் மத்தியானம் வாய்க்காலின் ஓரத்திலுள்ள பாறாங் கல்லின் மேல் தன் கட்டுச் சோற்று மூட்டையை யசோதரா அவிழ்த்து வைத்து, அதிலிருந்த எளிய உணவான மோர் சாதத்துடன் கொஞ்சம் தண்ணீரையுங் கலந்து சாப்பிடவாரம்பித்தாள்.

"அம்மா!" என்றாள் ஒருத்தி.

யசோதரா திரும்பிப் பார்த்தாள். இரு பெண்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்களைப் பார்ப்பதற்கே பரிதாபகரமாயிருந்தது. மெலிந்த மேனி, கிழிந்த ஆடை, வாடிய முகம், உட்குழிந்த கண்கள்.

"வாருங்களம்மா!" என்னிடம் இதோ இந்தச் சாதம்தானிருக்கிறது. நீங்களிவரும் இதைச் சாப்பிட்டுப் பசியாறுங்கள்" என்று யசோதரா உபசரித்தாள்.

"உனக்கு?" என்றாள் வந்தவள்.

"பாதகமில்லை, எனக்கு இப்பொழுது பசிக்கவில்லை. என் எஜமானி கொடுத்த கடலை இருக்கிறது. அதைத் தின்று தண்ணீர் குடித்தேனானால் சாயங்காலம் வீட்டுக்குப் போனதும் சாப்பாடு சாப்பிட்டுவிடுவேன் என்றாள்.

என்ன ஆச்சரியம்! அந்த இரண்டு பிச்சைக்காரிகளும் இரண்டு அழகிய தேவதைகளாக மாறியிருந்தனர்? அவர்களைக் கண்டதும் யசோதரா வணங்கினாள்.

அரசகுமாரி "அம்மா! உன்னுடைய அன்பைக் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன். பெற்றோர்களில்லாத உன்னை எங்கள் போல் ஒரு தேவதையாகச் செய்து, எங்கள் கூட்டத்துடன் சேர்த்துக் கொள்ளுகிறேன்" என்று கூறி தன்கையில் இருந்த தங்கக் குச்சியால் யசோதராவைத் தலையில் தொட்டாள். உடனே அந்தப் பெண் ஒரு அழகான தேவதையாக மாறினாள்.

மூவரும் ஆகாய மார்க்கமாகப் பறந்து போகும் பொழுது: அரசி தன் மகளிடம் "பெண்ணே! அகங்காரமும், கர்வமும் பிடித்த அந்த ராஜகுமாரிக்கும், ஏழ்மையான நிலையிலிருந்த இந்த அடக்கமான பெண்ணிற்குமுள்ள வித்தியாசத்தைப் பார்த்தாயா? ஆடம்பரமான வெளி வேஷத்தைக் கண்டு மயங்கி எளியோர்களை இனி வெறுக்காதே" என்று புத்தி மதி கூறினாள்.

அடுத்த பௌர்ணமிக்கு விலாசினி வனபோஜனத்திற்கு வரமுடியவில்லை. ஏனெனில், தேவதைகளின் அரசியின் சாபத்தால் ராஜகுமாரிக்கு இருபத்தேழு நாட்கள் கடுமையான ஜுரம் அடித்தது.